63

J63

# திவ்விய பூசையின்

# சாதாரண செபங்கள்

17 JAN 1947
MADRAS

325

Q6:4146

Nihil obstat:

G. A. Gurusamy, O.M.I., D.D., D.C.I.,

Mannar, 7—3—'40.

Imprimatur:

J. Emilianus Pillai, O.M.I., D.D., B.Sc.,

Vic. Gen.,

Jaffna, 19—4—'40.

திவ்விய பூசைப் பலியை
எவ்வளவு உத்தமமாய் ஒப்புக்கொடுக்கிறாயோ
அவ்வளவு உத்தம கிறீஸ்துவனாய் இருக்கிறாய்.

## Editor's Note

The harm done by the parrot-system in the teaching of the Catechism is carried a step further when we allow our faithful to recite, to sing or to listen to the Latin prayers of the Mass without knowing the meaning of the words. This little Tamil Missal containing the Ordinary of the Mass provides the remedy against it. With it our altar boys, our choristers and our people will be able to take their respective parts in the Mass with understanding and devotion. This can be used also as a manual for classes on Liturgy and for the introduction of the Dialogue Mass and Congregational Singing. Above all, our faithful can be made, with it, to pray the Mass instead of praying during the Mass.

The portion of the Ordinary of the Mass recited by the altar boys or sung by the choristers is given also in Latin. It has been suggested that, instead of transliterating the Latin script into Tamil characters, we should teach Latin pronunciation to our children. To meet this suggestion the Latin script has been retained and some lessons on the pronunciation of Latin have been added. This method increases a little the task of the teacher, but it reduces to zero the work of the transliterator. Moreover the advantage gained by the children will be enormous;

for they will soon be able to read the whole Latin Missal without waiting for the tedious work of a Tamil transliterator. Their pronunciation of Latin will also improve. For these reasons this method is at least worth experimenting.

The ceremonies of the Mass, it is claimed, portray the dealings of God with mankind from the Creation to the last Judgment. To make good this claim a meditation on the Mass, adapted from an English pamphlet published by me in 4-3-1925 has been included. Care has been taken to introduce as much as possible the very prayers of the Mass into this meditation. On Sundays and holy days of obligation, in places where people cannot hear Mass within a reasonable distance, this meditation can be used.

For the translation of the Ordinary of the Mass into Tamil I am indebted to the Rev. Fr. S. Gnana Prakasar, O.M.I., whom I thank most heartily for his permission to use it in this booklet. I also thank Rev. Fr. B. A. Thomas, O.M.I., for his permission to use his translation of the Benedicite.

For copies please apply to:

**B. Wm. Jesu Thasan,** O.M.I.

Pesalai, 1-2-'40.

Price—paper cover: 10 cts.
cloth cover: 20 cts.

# பொருளட்டவணை


பூசையைச் செபிக்கும் வகைகள் ... ... 1

பூசைக்கு முன் மன்றாட்டங்கள் ... ... 4

பூசைத் தியானம் ... ... ... 6

பூசையின் சாதாரண செபங்கள் :

I. இருதய சுத்தப் பகுதி ( 1— 9) ... 21

II. மன வெளிச்சப் பகுதி (10—15) ... 30

III. காணிக்கைப் பகுதி (16—25) ... 38

IV. தேவ வசீகரப் பகுதி (26—42) ... 42

V. அனுபவிப்புப் பகுதி (43—60) ... 51

பூசைக்குப் பின் தோத்திரம் ... ... 62

பூசைக்கு ஏதுவானவை ... ... 67

லத்தின் பாஷையின் உச்சரிப்பு ... ... 75

# பூசையைச் செபிக்கும் வகைகள்

பூசையைக் காணுகிறது போதாது, பூசையை ஒப்புக்கொடுக்கவேவேண்டும். பூசையில் செபிக்கிறது போதாது, பூசையையே செபிக்கவேண்டும்.

பூசையை உரத்துச் செபிக்கலாம் அல்லது மவுனமாய்ச் செபிக்கலாம், வாசித்துச் செபிக்கலாம் அல்லது பாடிச் செபிக்கலாம், தியானத்துடன் செபிக்கலாம் அல்லது தியானமில்லாமற் செபிக்கலாம். ஆகையால் பூசையைச் செபிக்கும் வகைகள் பல. ஆனால் சில காரியங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன. அதாவது தேவ வசீகரமாக்கும் நேரத்தில் பலனுள்ள செபங்களையும், திருப்பூசை முறையைச் சேர்ந்த செபங்களையும், குரு மவுனமாய்ச் சொல்லும் செபங்களையும் உரத்துச் செபிக்கப்படாது.

1. **சல்லாபப் பூசை.** இதில், பூசைப் பரிசாரகன் சொல்லும் செபங்களை பூசைப் பரிசாரகனோடும் பாடகர் பாடும் சாதாரண செபங்களை குருவோடும், லத்தின் பாஷையில் உரத்துச் செபிக்கலாம். இப்படி விசேஷமாய் சந்நியாச மடங்களிலும் பள்ளிக்கூட விடுதிகளிலும் செய்யலாம். ஆனால் இவ்வகைச் செபித்தலுக்கு மேற்றிராணியாரின் உத்தரவு அவசரம். [திருச்சடங்கின் பரிசுத்த சங்கம் ஜெனோவா நகரின் அதிமேற்றிராணியாருக்கு 1936-ஹில் எழுதிய நிருபம் காண்க].

2. **சல்லாப பாடற் பூசை.** இதில், பாடகர் பாடும் சாதாரண செபங்களை லத்தின் பாஷையில் ஆண்களும் பெண்களும் மாறி மாறிப் பாடலாம்.

பாடகர் பாடும் விசேஷ செபங்களைப் பாடகர்தானே பாடுகிறது உத்தமம். லத்தினில் பாடப்படும் அல்லது சொல்லப்படும் செபங்களின் கருத்தின் பொழிப்பைத் தமிழில் வாசித்து அறிந்திருக்கவேண்டும்.

3. **சபைப் பூசை.** இதில், விலக்கப்பட்ட செபங்களைத்தவிர மற்றப் பூசைச் செபங்களின் சிலவற்றை, தமிழ்ப் பாஷையில், ஆண்களும் பெண்களும் மாறி மாறி உரத்துச் செபிக்கலாம். உதாரணமாகக் கீழ்வரும் பூசைத் தியானத்தில் சிலுவை அடையாளத்துக்குப் பின்வரும் செபங்களை இப்படிச் செபிக்கலாம். ஆனல் நிருபத்தையும் சுவிசேஷத்தையும் ஒரு ஆள் தனிய வாசிக்கலாம். விசுவாசப் பிரமாணம் சொல்லுகையில் சனங்கள் "மனுஷனனர்" என்று சொல்லி முழந்தாள் இடும்போதுதான் குருவும் முழந்தாள் இடுதல் உத்தமம். சம்மனசுகளின் கானத்தை அல்லது விசுவாசப் பிரமாணத்தைச் சனங்கள் சொல்லி முடித்தபின்தான் குரு சனங்களைப் பார்த்து மினவுகிறது நல்லது. இவ்வகைச் செபித்தலைத் துவங்கமுதற் பள்ளிக்கூடப் பிள்ளைகளை இதில் நல்லாய் பழக்கவேண்டும்.

4. **சபைத் தியானப் பூசை.** இதில், பூசைச் செபங்களின் சிலவற்றை அல்லது பூசைச் செய்கைகளின் கருத்தை ஒரு ஆள் உரக்க வாசிக்க மற்றவர்கள் அதைத் தியானித்துக்கொண்டிருக்கலாம். உதாரணமாகக் கீழ்வரும் பூசைத் தியானத்தை இப்படிப் பூசை நேரத்தில் வாசிப்பித்து தியானித்துக்கொள்ளலாம். பூசையின் விசேஷ செபங்களையும் இப்படி வாசிப்பிக்கிறதுதான் வசதியாயிருக்கும்.

5. **தனிப் பூசை.** இதில், ஒவ்வொருவரும் தன்தன் பூசைப் புத்தகத்தில் பூசைச் செபங்களை

மவுனமாய் வாசித்துச் செபிக்கலாம். இவ்வகைச் செபித்தலில் குருவின் பூசைச் செய்கைகளை இடைக்கிடை என்கிலும் பார்க்கவேண்டியிருப்பதால், எல்லாப் பூசைச் செபங்களையும் வாசிக்கமுடியாது. அப்படி வாசிப்பது அவசரமுமில்லை.

6. **தனித் தியானப் பூசை.** இதில், ஒன்றும் வாசியாமல் பூசைச் செய்கைகளைப் பார்த்து, அவைகளின் கருத்தை அல்லது பூசைச் செபங்களின் நோக்கத்தைத் தியானிக்கலாம். இவ்வகைச் செபித்தலுக்கு பூசையைப்பற்றி நல்லாய் படித்திருக்கிறதும் மற்ற வகைகளால் பூசையைச் செபித்துப் பழகியிருக்கிறதும் அவசியம். இப்படி இடைக்கிடை செபிக்கிறது உத்தமமாய் இருக்கும்.



# பூசைக்குமுன் சொல்லத்தக்க மன்ருட்டங்கள்

1. பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவாகிய திரி ஏக சருவேசுரா, இப்போது நாங்கள் உமக்கு ஒப்புக் கொடுக்கப்போகிற பூசைப் பலியை ஏற்று, எங்கள் பாவங்களைப் பொறுத்து, மோட்ச பாக்கியத்தின் சுதந்தரத்தை எங்களுக்கு அளிக்குமாறு தேவரீரை மன்ருடுகிருேம்.

**துணைவர் :**—எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும், சுவாமி.

2. எங்கள் பாப்பானவருடையவும், மேற்றிராணியாருடையவும், பங்குக் குருவானவருடையவும் கருத்துக்கள் யாவையும் அனுகூலப்படுத்தி, அவர்களையும் மற்றும் சகல ஞான மேய்ப்பர்களையும் சத்திய வேத முறைகளில் காத்தருளவேணுமென்று தேவரீரை மன்ருடுகிருேம்.

3. சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் பத்திக் கூட்டங்களின் அங்கத்தவர்களும் சாங்கோ பாங்கத்தில் வளரச் செய்யத் தேவரீரை மன்ருடுகிருேம்.

4. விசுவாசிகள் தேவ நேசத்தில் அதிகரிக்கவும், பாவிகள் மனந்திரும்பவும், பதிதர், மகமதியர், சைவர், புத்தர் முதலானவர்கள் சத்திய வேதத்திற் சேரவும் செய்யத் தேவரீரை மன்ருடுகிருேம்.

5. உலகத்தில் தேவ துரோகங்களையும், வேத கலாபனைகளையும், நீதியீனங்களையும், யுத்தங்களையும் நீக்கிவிடும்படி தேவரீரை மன்ருடுகிருேம்.

6. இலங்கையையும் இந்து தேசத்தையும் பிரித்தானிய இராச்சியத்தையும் உமது நேசச் சுவாலையில் எரித்து, கத்தோலிக்க நாடுகளாகவும் அர்ச்சியசிஷ்டர்களின் வாசஸ்தானங்களாகவும் செய்தருளும்படி தேவரீரை மன்றாடுகிறோம்.

7. எங்களூரில் போதுமான ததிமாரி பெய்யப் பண்ணவும், தவச தானியங்கள் விளையப்பண்ணவும், தொழில் துறைகளை விருத்தியாக்கவும், இடைஞ்சல் இக்கட்டுகளை நீக்கவும், மதுபானம் குறையச் செய்யவும், சமாதானம் நிறையச் செய்யவும் வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

8. எங்கள் இனத்தவர்களையும் சிநேகிதர்களையும், உபகாரிகளையும் பகையாளிகளையும் ஆசீர்வதிக்கும்படி தேவரீரை மன்றாடுகிறோம்.

9. நோயாளருக்கு ஆரோக்கியத்தையும், அவஸ்தைப்படுகிறவர்களுக்கு ஈடேற்றத்தையும், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் அளிக்கும்படி தேவரீரை மன்றாடுகிறோம்.

10. யூஜீன் மசனட் யோசேவ் வாஸ் முனிவர்களுக்கும், எங்கள் வேதசாட்சிகளுக்கும் அர்ச்சியசிஷ்ட பட்டம் கிடைக்கச் செய்யும்படி தேவரீரை மன்றாடுகிறோம்.

11. தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார், சவேரியார், தெரேசம்மாள் முதலான அர்ச்சியசிஷ்டர்களின் பாதுகாப்பும் தேவ தூதர்களின் காவலும் எங்களுக்குக் கிடைக்கவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

## பூசைத் தியானம்

குறிப்பு:—பூசைத் தியானம் பூசை காணுகிறபொழுது செய்தால், "அதை உத்தேசித்து" என்ற வார்த்தைகளோடு துவங்கும் செபங்களைத் தவிர்த்துவிட்டு, சிலுவை அடையாளத்துக்குப் பின்வரும் செபங்களைச் சொல்லவும்.

### பீட ஆயத்தம்

பீடம் எரிகிற மெழுகுதிரிகளால் ஒளி அடைந்து அலங்கரிக்கப்பட்டிருக்க, தேவதூதர் அதைச் சூள நிற்கிறார்கள்.

சருவேசுரன் வானத்தையும் பூமியையும், சம்மனசுகளையும் மனுஷரையும் படைக்கிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

ஆண்டவரே! நீர் ஆறு நாட்களில் உலகத்தைப் படைத்து, ஏழாம் நாள் ஓய்ந்திருந்தீரே. நாங்கள் இந்த உலக பண்டங்களின் வெறுமையை யோசித்து, எங்கள் ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் காப்பாற்ற கிருபை பண்ணியருளுஞ் சுவாமி.

### ஆசிநீர் தெளித்தல்

குரு ஆசீர்வதிக்கப்பட்ட நீரால் தெளிக்கிறார்.

தேவ ஆவியானவர் சலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருக்கிறார்.

அதை உத்தேசித்து, தேவ ஆவியானவர் ஆசீர்வதித்த நீரால் எங்கள் ஆத்துமங்களைச் சுத்தமாக்கிப் பிரார்த்தித்துக்கொள்ளுவோம்.

✠ சர்வ வல்லபரான பிதாவே......

(பூசையின் சாதார. செப. 1-ம் இல.)

## குருவின் வருகை

குரு பீடத்தை நோக்கித் தலை குனிந்து வணங்கி, மேடைமேல் ஏறி, பூசைப் பாத்திரத்தை பீடத்தில் வைக்கிறார்.

முதல் மனிதன் வெளிச்சத்தில் கண் விழித்து, தன் சிருட்டிகரை ஆராதித்து, தனக்கு ஆயத்தம் பண்ணப் பட்ட இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளுகிறான்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! எங்களிடத்தில் இருக்கும் சகல நன்மைகளும் உம்மிடத்திலேயிருந்து வந்தன. அவைகளுக்கும் நீர் எங்கள்பேரில் வைத்திருக்கின்ற மட்டில்லாத இரக்கத்துக்கும் நன்றியறிந்த தோத்திரம் பண்ணுகிறோம் சுவாமீ.

## புத்தகத்தை விரித்தல்

குரு பூசைப் புத்தகத்தை திறந்துவைத்து மேடை நடுவில் நின்று தலை குனிகிறார்.

மனிதன் தேவனிடத்தில் இருந்து கற்பனைகளைப் பெற்று அவைகளை அனுசரிப்பேன் என்று வாக்குப்பண்ணுகிறான்.

அதை உத்தேசித்து, பத்துக் கற்பனைகளைச் சொல்லுவோம் :

" ஒரே சருவேசுரனை ..... "

## கீழே இறங்குதல்

குரு மேடையை விட்டு கீழே இறங்குகிறார்.

எங்கள் ஆதித்தாய்தகப்பன் பாவத்திலே விழுகிறார்கள்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! எங்கள் ஆதித்தாய் தகப்பன் செய்த பாவத்தின் தோஷத்தோடே நாங்கள் யாவரும்

பிறந்திருந்தாலும், உமது இரட்சணியத்தால் எங்களுக்கு மோட்ச உரிமையை திரும்பவும் தந்தீரே. நாங்கள் பாவத்தை விலக்கி மோட்ச இராச்சியத்தில் சேர அனுக்கிரகம் பண்ணியருளுஞ் சுவாமீ.

## பாவசங்கீர்த்தனம்

குரு "நான் பெரும் பாவி" மந்திரம் சொல்லி பிழை தட்டி தேவ மன்னிப்புக் கேட்கிறார்.

மனிதன் தன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட, சருவேசுரன் ஒரு இரட்சகரை வாக்குப்பண்ணுகிறார்.

அதை உத்தேசித்து நம்முடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுச் சொல்லுவோம் :

✠ சருவத்துக்கும் வல்ல......(3-ம் இல.)

## கிருபை கேட்டல்

குருவும் பூசைப் பரிசாரகனும் "சுவாமீ கிருபையாயிரும், கிறீஸ்துவே கிருபையாயிரும்" என்று மாறி மாறிச் சொல்லுகிறார்கள்.

நாலாயிரம் வருஷங்களாக பிதாப் பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் மெசியாவை எதிர்பார்த்துப் பெருமூச்சுவிடுகிறார்கள்.

அதை உத்தேசித்து, நாமும் பிரார்த்திப்போம் :

✠ சுவாமீ கிருபையாயிரும்......(7-ம் இல.)

## சம்மனசுகளின் கானம்

குரு கை குவித்து சம்மனசுகளின் கானத்தைச் சொல்லுகிறார்.

தேவ குமாரன் ஒரு குழந்தையாகப் பிறக்க, தேவ தூதர் பாடுகிறார்கள்.

அதை உத்தேசித்து, சம்மனசுகளுடன் நாமும் சொல்லுவோம் :

✠ . உன்னதங்களிற்......(8-ம் இல.)

## சபைச் செபம்

குரு சபைச் செபம் சொல்லி ஆத்தும சரீர சுகத்தைச் சனங்களுக்குக் கொடுக்கும்படி தேவனைக் கேட்கிறார்.

யேசுநாதர் முப்பது வருஷ காலமாக ஞானத்திலும் பிராயத்திலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்து வருகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே, யேசுவே! நீர் எங்கள் ஆத்துமங்களில் உமது இஷ்டப்பிரசாதத்திலே பிறந்து நாளுக்கு நாள் ஓங்கி வளர்ந்து, எங்கள் அந்தஸ்துக்குரிய கடமைகள் யாவையும் சமுத்திரையாய்ச் செய்ய உதவிபுரிந்தருளுஞ் சுவாமீ.

## நிருபம்

குரு தீர்க்கதரிசிகளுடைய அல்லது அப்போஸ்தலர்களுடைய புத்தகங்களின் ஒரு பகுதியை வாசிக்கிறார்.

கடைசித் தீர்க்கதரிசியாகிய ஸ்நாபக யுவானியார் தமது போதனையால் யேசுவின் பிரத்தியட்சத்துக்கு ஆயத்தம் பண்ணுகிறார்.

அதை உத்தேசித்து, யேசுநாதருடைய சுவிசேஷத்தைக் கேட்கிறதற்கு ஆயத்தமாக தீர்க்கதரிசிகளுடையவும் அப்போஸ்தலர்களுடையவும் போதனைக்குச் செவி கொடுக்கக்கடவோம் :

✠ சகோதரரே, உலகம் உங்களைப்.....(10-ம் இல.)

## ஆசி கேட்டல்

குரு தலை குனிந்து தேவ ஆசீர்வாதம் கேட்கிறார்.

யேசுநாதர் யுவானியாரிடம் ஞானஸ்நானம் பெறுகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :

ஆண்டவரே ! நாங்கள் ஞானஸ்நானத்தில் பெற்ற விசுவாச வெளிச்சத்தையும் இஷ்டப்பிரசாத வெள்ளை அங்கியையும் எங்கள் மரண பரியந்தம் இழந்துபோகாமல் காப்பாற்ற உதவி செய்தருளுஞ் சுவாமீ.

## சுவிசேஷம்

| | |
|---|---|
| குரு தன்மேல் சிலுவை வரைந்து சுவிசேஷம் வாசிக்கிறார். | யேசுநாதர் உலகத்துக்கு தமது சுவிசேஷத்தைப் போதிக்கிறார். |

அதை உத்தேசித்து, யேசுநாதரைப் பின்தொடர ஆயத்தமாய் இருக்கிறோம் என்றதைக் காட்டும்படியாக எழுந்து நின்று, அவருடைய திருவாக்கியத்துக்கு செவி கொடுக்கக்கடவோம் :

✠ அந்தக் காலத்திலே ; யேசுநாதர்...(14-ம் இல.)

## விசுவாசப் பிரமாணம்

| | |
|---|---|
| குரு விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுகிறார். | யேசுநாதர் திருச்சபையை அர்ச். இராயப்பர் மேல் ஸ்தாபிக்கிறார். |

அதை உத்தேசித்து, திருச்சபை படிப்பிக்கும் சத்தியங்களுக்காகப் பிராணனை முதலாய்க் கொடுக்க ஆயத்தத்தோடே விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுவோம் :

✠ பரலோகத்தையும்......(15-ம் இல.)

## காணிக்கை

| | |
|---|---|
| குரு அப்பத்தையும் இரசத்தையும் காணிக்கையாக்குகிறார். | யேசுநாதர் சற்பிரசாதத்தை ஏற்படுத்துகிறார். |

அதை உத்தேசித்துச் சொல்லக்கடவோம் :

✠ பரிசுத்த பிதாவே......(17-ம் இல.)

✠ பரிசுத்தப்படுத்துகிறவரே......(21-ம் இல.)

## கை கழுவுதல்

குரு தன் கைகளைக் கழுவு கிறார்.

யேசுநாதர் தமது சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

ஆண்டவரே! இந்தப் பலியிலே நாங்கள் பங்கு பற்றுகிறதற்குப் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக, எங்கள் இருதயங்களிலிருந்து ஆங்காரம், கோபம், பகை, காய்மகாரம் முதலிய பாவங்களை நீக்கி, எங்களுக்கு மிகவும் மேலான பிறர்சிநேகத்தைத் தந்தருளுஞ் சுவாமீ.

## பொதுக் காணிக்கை

குரு தலை குனிந்து காணிக்கையாக்கின பொருட்களைத் திரும்பவும் பரம திரித்துவத்துக்கு ஒப்புக் கொடுக்கிறார்.

யேசுநாதர் முகங்குப்புற விழுந்து இரத்த வேர்வை சிந்தித் தம்மைப் பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுக் கிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

ஆண்டவரே! நீர் பிதாவைப் பிரார்த்தித்து உமது சரீர வாதையைப் பாராமல் அவர் சித்தம் ஆகட்டுமென்று ஒருமித்தீரே. அப்படியே நாங்கள் உலக துன்ப துரிதங்களை உறுதியோடே பொறுக்கவும், செய்கிற கிரியைகள் யாவும் உமது சித்தத்தின் படியே துவக்கவும் முடிக்கவும் எங்களுக்குக் கிருபை பண்ணியருளுஞ் சுவாமீ.

## சபையின் மன்றட்டு

குரு சபையைத் திரும்பிப் பார்த்து "சகோதரரே மன்றாடுங்கள்" என்று சொல்லு கிறார்.

யேசுநாதர் தமது சீஷர்களைத் தம்மோடு விழித்திருந்து மன்றாடும்படி கேட் கிறார்.

அதை உத்தேசித்து, குருவானவர் பண்ணுகிற பூசை சருவேசுரனுக்கு உவப்பானதாய் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுவோம்:

✠ சருவேசுரன் தமது திருநாமத்தின்...(24-ம் இல.)

## முகவுரை

குரு முகவுரையை வாசித்து "கர்த்தரின் நாமத்தினால் வருகிறவருக்கு உன்னதங்களில் ஓசன்னா" என்று சொல்லுகிறார்.

யேசுநாதரை யூதர் மகா கொண்டாட்டத்தோடு ஓசன்னா என்று பாடி ஜெருசலேம் நகருக்கு வரவேற்கிறார்கள்.

அதை உத்தேசித்து, நாங்களும் கிறீஸ்து இராசாவை வாழ்த்தக்கடவோம்:

✠ பரிசுத்தர் பரிசுத்தர்.....(27-ம் இல.)

## திருச்சபையின் ஞாபகம்

குரு திருச்சபைக்காகவும், திருச்சபையின் அதிகாரிகளுக்காகவும், சகல விசுவாசிகளுக்காகவும் மன்றாடித் திருப்பூசை முறையைத் தொடங்குகிறார்.

யேசுநாதர் யூதர் கையில் அகப்பட்டு, தமது சீஷர்களால் மறுதலிக்கப்பட்டு, குருமார் சபையிலே குற்றஞ் சாட்டப்பட்டு, தமது பாடுகளைத் தொடங்குகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! உமது மன்றாட்டினால் உம்மை மறுதலித்த பேதுறுவானவரை மனந்திருப்பி அவரால் உமது மற்றச் சீஷர்களையும் விசுவாசத்தில் திடப்படுத்தினீரே. திருச்சபையின் அதிகாரிகளாகிய எங்கள் பாப்பானவரையும் மேற்றிராணியாரையும் மற்றும் ஞான மேய்ப்பர்களையும் ஆசீர்வதித்தருளுஞ் சுவாமீ.

## சீவியருடைய ஞாபகம்

குரு தமது கருத்துகளுக்காகவும் சகல சீவியர்களுக்காகவும் மன்ருடுகிருர்.

யேசுநாதர் தம்மை வாதிக்கிறவர்களுக்காகவும் சகல மனுஷர்களுக்காகவும் மன்ருடுகிருர்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! தேவரீர் பொய்யான குற்றச்சாட்டுகளேயும், அநீதியான தீர்வைகளேயும், கற்றாணில் கட்டி அடித்த அடிகளேயும், முள்முடி தரித்துப் பண்ணின பரிகாசங்களேயும் பாவிகளாயிருக்கிற எங்களுக்காகச் சகித்தது மாத்திரமல்ல உம்மை இப்படி வாதித்தவர்களுக்காகவும் பிதாவைப் பிரார்த்தித்தீரே. அப்படியே பிறத்தியார் எங்களுக்கு வருவிக்கிற உபத்திரவங்களே நாங்கள் பொறுமையோடு ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்காக மன்ருடவும் கிருபை செய்தருளுஞ் சுவாமீ.

## அர்ச்சியசிஷ்டர்களின் ஞாபகம்

குரு சகல அர்ச்சியசிஷ்டர்களோடு ஐக்கியமாகி அவர்களுடைய மன்ருட்டங்களின் உதவியைக் கேட்கிருர்.

யேசுநாதர் சிலுவை சுமந்து போகும்போது அவரின் மாதாவும் வேறு சுத்தவாளர்களும் அவருக்கு ஆறுதலாய் இருக்கிருர்கள்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! உமக்குப் பணிசெய்த சுத்தவாளர்களுடைய புண்ணியங்கள் உமக்கு ஆறுதலாயிருக்கத் திருவுளமானீரே. அப்படியே நாங்களும் அவர்களுடைய சுகிர்த பலன்களேப் பெற்று அவர்களுடைய சலுகையை அடையத்தக்கதாகக் கிருபை பண்ணியருளுஞ் சுவாமீ.

## பாத்திரத்தின்மேல் கை விரித்தல்

குரு பாத்திரத்தின் மீதே இரு கைகளையும் உயர்த்தி வைத்தபின் காணிக்கையாகின பொருட்களின்மேல் சிலுவை வரைகிறார்.

யேசுநாதர் சிலுவையோடே கபால மலையின் உச்சிக்கு வந்தபின் அவரைச் சிலுவையிலே கிடத்தித் திருப்பாத கரங்களில் ஆணிகள் அறைகிறார்கள்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

ஆண்டவரே! நீர் கபாலமலையின் உச்சிக்கு வந்தபோது உம்முடைய திரு வஸ்திரங்களை உரிந்து உமக்கு வருவித்த மானபங்கத்தை எங்கள் வெட்கத்துக்குரிய பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உம்மைச் சிலுவையில் அறையும்போது உமக்கு உண்டான வேதனைகளை எங்கள் கொடுமையான நீதியீனங்களுக்குப் பரிகாரமாகவும் ஒப்புக்கொடுத்தீரே. அப்படிப்பட்ட பாவங்களை நாங்கள் விலக்கி நடக்க உதவிசெய்தருளுஞ் சுவாமீ.

## I-ம் எழுந்தேற்றம்

குரு அப்பத்தை தேவ வசீகரமாக்கி எழுந்தேற்றம் பண்ணுகிறார்.

யேசுநாதரைச் சிலுவையோடே உயர்த்துகிறார்கள்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

மு.: எங்களுக்காகக் கையளிக்கப்பட்ட தேவ சரீரமே!

து.: உமக்கே நமஸ்காரம்.

மு.: சிலுவையிலே பாடுபட்டு லோகத்தை ஈடேற்றினவரே!

து.: உமக்கே ஸ்தோத்திரம்.

மு. : தேவதிரவிய கருவூலமாகிய மகா பூச்சிய முள்ள சற்பிரசாதமே!

து. : உமக்கே ஆராதனை.

## II-ம் எழுந்தேற்றம்

குரு இரசத்தை தேவ வசீகரமாக்கி எழுந்தேற்றம் பண்ணுகிறார்.

யேசுநாதர் மனுஷருக்காக இரத்தம் சிந்தித் தமது பிராணனைக் கொடுக்கிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

மு. : பாவிகளுக்காக சிந்தப்பட்ட திவ்விய உதிரமே!

து. : உமது விலைமதிக்கப்படாத பேறு பேறுகளால் எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

மு. : தேவ விலாவால் இரத்தத்தோடு சொரிந்த தண்ணீரே!

து. ; எங்கள் ஆத்துமங்களைக் கழுவும்.

மு. : சுகிர்தம் விளைகிற பிரசாத ஊறணியே!

து. : உமது பிரசாதங்களால் எங்கள் ஆத்துமங்களிலே சுகிர்த பலனை உண்டாக்கிக் கொள்ளும்.

## பாத்திரத்துக்குமுன் கைகுவித்தல்

குரு சற்று வேளை செபித்தபின் பீடத்தின்மேல் கை குவித்து பிதாவாகிய சருவேசுரன் தமது ஏக சுதனின் பலியை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகிறார்.

யேசுநாதர் மரிக்கும்போது "பிதாவே, உமது கரங்களிலே என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

சருவத்துக்கும் வல்ல பிதாவே, தேவரீருடைய ஏக சுதனுகிய யேசுக்கிறீஸ்துவின் பலியை ஏற்று, எங்களைப் பாவத்தில் நின்றும் நரகத்தில் நின்றும் இரட்சித்து, எங்களுக்கு உமது இஷ்டப்பிரசாதத்தையும் மோட்ச சம்பாவனையையும் தந்தருளுஞ் சுவாமி.

## மரித்தோருடைய ஞாபகம்

குரு மரித்தவர்கள் சகலருக்கும் நித்திய இளைப்பாற்றி கிடைக்கும்படி வேண்டுதல் பண்ணுகிருர்.

யேசுநாதருடைய ஆத்துமம் பாதாளங்களிலே இறங்கி மரித்த புண்ணியவான்களுக்கு ஆறுதல் சொல்லுகிறது.

அதை உத்தேசித்து, மரித்தவர்களுக்காகப் பிரார்த்திப்போமாக:— உ

மு.: நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்குத் தந்தருளுஞ் சுவாமி.

து.: முடிவில்லாத வெளிச்சம் இவர்களுக்குப் பிரகாசிக்கக்கடவது.

மு.: சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக!

து.: ஆமென்.

## பாவிகளான எங்களின் ஞாபகம்

குரு பிழை தட்டி "பாவிகளான எங்களுக்கும்" என்ற செபத்தைச் சொல்லுகிருர்.

யேசுநாதர் மரித்ததைக் கண்ட அநேக பாவிகள் மனந்திரும்புகிருர்கள்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக:—

ஆண்டவரே, எங்களையும் சகல பாவிகளையும் அஞ்ஞானிகளையும் மனந்திருப்பும்படி தேவரீரைக் கெஞ்சி மன்ருடுகிருேம் சுவாமி.

## இயற்கையின் ஞாபகம்

குரு சருவேசுரன் சிருஷ்டித்த நன்மைகளையெல்லாம் யேசுநாதர் மூலமாக ஆசீர்வதித்துத் தந்தருளும்படி கேட்கிறார்.

யேசுநாதர் மரிக்கும் வேளையில் சூரியன் இருளுகிறது, பூமி அதிருகிறது, சகல சிருஷ்டிகளும் அவர் மேல் துக்கிக்கின்றன.

அதை உத்தேசித்து எங்களுக்குச் சகல நன்மைகளும் கிடைக்கும்படியாக கர்த்தருடைய செபத்தைச் சொல்லுவோம்:

✠ பரமண்டலங்களிலே இருக்கிற.....(42-ம் இல.)

## கலக்குதல்

குரு "கர்த்தருடைய சமாதானம் உங்களுடனே" என்று சொல்லி, சற்பிரசாத அப்பத்தில் ஒரு சிறு துண்டை சற்பிரசாத இரசத்தோடு கலக்கிறார்.

யேசுநாதர் உயிர்த்தெழுந்தருளித் தமது சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்து "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று சொல்லுகிறார்.

அதை உத்தேசித்து, பிழைதட்டி வேண்டிக்கொள்ளுவோம்:

✠ லோக பாவங்களைப் போக்குகிற...(45-ம் இல.)

✠ ஆண்டவராயிருக்கிற யேசுக்கிறீஸ்துவே, சீவியராகிய தேவனின் குமாரனே!.....(47-ம் இல.)

## அனுபவிப்பு

குருவும் சனங்களும் சற்பிரசாதம் உட்கொள்ளுகிறார்கள்.

யேசுநாதர் திருச்சபையோடு எப்போதும் இருப்பேன் என்று வாக்குப்பண்ணுகிறார்.

அதை உத்தேசித்து, சற்பிரசாதத்தினால் எங்களோடு ஒன்றித்துச் சீவிக்கத் திருவுளமான எங்கள் இனிய யேசுவைத் தோத்திரித்துச் சொல்லுவோம் :

✠ ஆண்டவரே, நாங்கள் வாயினால்......(54-ம் இல.)

✠ ஆண்டவரே, அடியேன்.....(55-ம் இல.)

## அனுபவித்தபின் சேபம்

| குரு சபையைத் திரும்பிப் பார்த்து மினவுதல் பண்ணி, சற்று வேளை புத்தகம் வாசித்துச் செபிக்கிறார். | யேசுநாதர் நாற்பது நாளாகத் தமது சீஷர்களோடு தேவ இராச்சியத்தைப்பற்றிப் பேசிவருகிறார். |
|---|---|

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே, தேவரீர் உயிர்த்தெழுந்தருளினபின் நாற்பது நாளாக உமது மாதாவுக்கும் சீஷர்களுக்கும் மகா ஆனந்த சந்தோஷத்தைக் கொடுத்தீரே. அதைப் பார்த்து நாங்கள் பாவமென்கிற மரணத்தைவிட்டெழும்பி உமது திருமுக தரிசனையைப் பெற்றுக் களிகூர்ந்திருக்கக் கிருபை பண்ணியருளுஞ் சுவாமீ.

## பிரியா விடை

| குரு "போய் வாருங்கள் பூசை முடிந்தது" என்று சொல்லுகிறார். | யேசுநாதர் இரட்சணிய அலுவலை முடித்து பரலோகத்துக்கு எழுந்தருளுகிறார். |
|---|---|

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! பாவத்தினால் மூடப்பட்ட மோட்ச வாசலை நீர் திரும்பவும் எங்களுக்குத் துறந்துவிட்டீரே. மோட்சத்திலே நீர் எங்களுக்கு ஆயத்தப்படுத்தின இடத்தை நாங்கள் இழந்துபோகாதபடி காத்தருளுஞ் சுவாமி.

## ஆசீர்வாதம்

| | |
|---|---|
| குரு ஜனங்களை ஆசீர்வதிக்கிருர். | இஸ்பிரீத்து சாந்துவானவர் அப்போஸ்தலர் மேல் இறங்குகிருர். |

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே! உமது இஸ்பிரீத்து சாந்துவின் வரத்திஞல் நாங்கள் சத்திய வேதத்தில் உறுதியாய் நிலைநிற்கவும் அதை உலகமெங்கும் பரப்ப முயற்சி பண்ணவும் உதவி புரிந்தருளுஞ் சுவாமி.

## கடைசிச் சுவிசேஷம்

| | |
|---|---|
| குரு அப்போஸ்தலராகிய அருளப்பர் எழுதிய சுவிசேஷத்தின் ஆரம்பத்தை வாசிக்கிருர். | அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சுவிசேஷத்தைப் போதிக்க ஆரம்பிக்கிருர்கள். |

அதை உத்தேசித்து, சுவிசேஷ போதனையை எழுந்து நின்று கேட்கக்கடவோம் :—

✠ ஆதியிலே வார்த்தையானவர்.....(59-ம் இல)

## திருச்சபைக்காகச் சேபங்கள்

| | |
|---|---|
| குருவும் ஜனங்களும் திருச்சபையை சத்துராதிகளில் நின்று பாதுகாக்கும்படி மன்ருடுகிருர்கள். | திருச்சபை வேத சத்துராதிகளோடு உலக முடியுமட்டும் போராடி வெற்றி அடைகிறது. |

அதை உத்தேசித்து, திருச்சபை வெற்றியடையும்படி மன்ருடுவோம்.

✠ பிரியதத்தத்திஞலே......(60-ம் இல)

## முடிவு

குரு பூசை முடித்து பாத்திரத்தைக் கையில் ஏந்தி, மேடையை விட்டு இறங்குகிறார்.

யேசுநாதர் உலக முடிவில் மனுக்குலத்தை நடுத்தீர்க்க வான மேகங்களில் வீற்றிருந்து வருகிறார்.

அதை உத்தேசித்துப் பிரார்த்திப்போமாக :—

ஆண்டவரே, தேவரீர் உலக முடியுங் காலத்திலே மகா பிரதாபத்தோடு எழுந்தருளி கெட்டவர்களை நரகத்துக்குச் சபித்துத் தள்ளி, புண்ணியவான்களை அரவணைத்து மோட்ச இராச்சியத்துக்கு அழைப்பீரே. நாங்கள் இப்படிப்பட்ட நடுத்தீர்வையை நிதமும் அவதானித்துப் பயங்கரத்தோடே நடந்து பாவ வழியை விட்டுத் தேவ இஷ்டப்பிரசாதத்தோடே மரித்து, மோட்ச இராச்சியத்திலே பிரவேசிக்கக் கிருபை பண்ணியருளுஞ் சுவாமி. ஆமென்.

# பூசைப் பலியின் சாதாரண செபங்கள்

## I. இருதய சுத்தப் பகுதி

### †† 1. ஆசிநீர் தெளித்தல்

[ஞாயிற்றுக்கிழமைகளில் பிரதான பூசைக்குமுன்]

| | |
|---|---|
| 1. Asperges me, Domine, hissopo, et mundabor : | ஆண்டவரே! நீர் ஈசோப்பென்னும் புல்லினால் என்மேல் தெளிக்க நான் சுத்தமாவேன். |
| 2. Lavabis me, et super nivem dealbabor. | நீர் என்னைக் கழுவ நான் வெண்பனிக்கட்டியிலும் தூய்மையாவேன். |
| 3. Miserere mei Deus. | சுவாமி! என்மேல் கிருபையாயிரும். |
| 4. Secundum magnam misericordiam tuam. | உமது இரக்கத்தின் விசாலத்துக்குத் தக்கபடி. |
| 5. Gloria Patri et Filio et Spiritui Sancto. | பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது. |
| 6. Sicut erat in principio et nunc et semper et in sæcula sæculorum. Amen. | ஆதியில் ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் ஆகக்கடவது. ஆமென். |
| Asperges me...... | ஆண்டவரே! நீர்......... |

†† எல்லாப் பூசையிலும் எழுந்து நிற்றல்.

[பாஸ்கு காலத்தில்]

1. Vidi aquam egredientem de templo a latere dextro, alleluia :

ஆலயத்தின் வலது பக்கத்தினின்று தண்ணீர் ஓடக்கண்டேன், அல்லெலூயா !

2. Et omnes ad quos pervenit aqua ista salvi facti sunt et dicent, alleluia, alleluia.

அந்தத் தண்ணீர் எவர்களிடம் வந்ததோ அவர்களெல்லோரும் இரட்சிக்கப்பட்டு, அல்லெலூயா, அல்லெலூயா, என்று சொல்வார்கள்.

3. Confitemini Domino quoniam bonus :

ஆண்டவரை ஸ்துதியுங்கள், ஏனெனில் அவர் நல்லவர்:

4. Quoniam in sæculum misericordia ejus.

அவருடைய இரக்கம் எக்காலமும் நிலைத்திருக்கும்.

5. Gloria......

பிதாவுக்கும்.....(மேற்படி)

6. Sicut......

ஆதியில்........

Vidi aquam.....

ஆலயத்தின் வலது.........

**குரு. Ostende nobis, Domine, misericordiam tuam. [alleluia]

ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காண்பித்தருளும், [அல்லெலூயா.]

பரிசாரகன். Et salutare tuum da nobis. [alleluia]

உமது இரட்சணியத்தை எங்களுக்குத் தாரும், [அல்லெலூயா.]

குரு. Domine exaudi orationem meam.

ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்.

பரி. Et clamor meus ad te veniat.

எனது அபயசத்தம் உமது சன்னிதிமட்டும் வரக்கடவது.

குரு. Dominus vobiscum.

கர்த்தர் உங்களுடனே.

பரி. Et cum spiritu tuo.

உமது ஆத்துமத்துடனேயும்.

---

** எல்லாப் பூசையிலும் முழந்தாள் இடுதல்.

### பிரார்த்திக்கக்கடவோம்

சர்வ வல்லபரான பிதாவே, நித்திய கடவுளே, பரிசுத்த கர்த்தாவே, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த இல்லத்தில் இருக்கும் எல்லோரையும் பாதுகாத்து, போஷித்து, காப்பாற்றி, சந்தித்து, தற்காக்கும்படி உம்முடைய பரிசுத்த சம்மனசானவரை பரலோகத்திலின்று அனுப்பியருளும். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து காரண காட்சியாக ஆமென்.

### ** 2. சங்கீதம்

பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்து சாந்துவுடையவும் நாமத்தினாலே. ஆமென்.

[இந்த 42-ம் சங்கீதம் மரித்தோர் பூசையிலும் திருப்பாடுகளின் வாரத்திலும் சொல்லப்படுவதில்லே.

| | |
|---|---|
| குரு. Introibo ad altare Dei. | சருவேசுரனுடைய பீடத்தின் முன் பிரவேசிப்பேன். |
| பரி. Ad Deum, qui lætificat \| juventutem meam. | எனது வாலிபத்தை மகிழ்ச்சிப்படுத்தும் தேவனிடத்தில் (பிரவேசிப்பேன்.) |
| குரு. Judica me, Deus, et discerne causam meam de gente non sancta: ab homine iniquo et doloso erue me. | சருவேசுரா, தேவரீர் பத்தியற்ற ஜனத்துக்கு விரோதமாய் என் நியாயத்தை விசாரித்து, கெட்டவனும் கபடுள்ளவனுமாகிய மனிதனுக்கு என்னைத் தப்புவியும். |
| பரி. Quia tu es, Deus \| fortitudo mea \| quare me repulisti ? \| et quare tristis incedo \| dum affligit me inimicus? | ஏனெனில் சருவேசுரா, தேவரீரே என் பலம். ஏன் என்னைத் தள்ளிவிட்டீர்? சத்துரு என்னைத் துன்பப்படுத்தும்போது நான் துக்கத்தோடு திரிவானேன்? |

** எல்லாப் பூசையிலும் முழந்தாள் இடுதல்.

குரு. Emitte lucem tuam et veritatem tuam: ipsa me deduxerunt et adduxerunt in montem sanctum tuum, et in tabernacula tua.

உமது பிரகாசத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தி உமது பரிசுத்த பருவதத்திற்கும் உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டுபோம்.

பரி. Et introibo ad altare Dei: | ad Deum qui lætificat | juventutem meam.

சருவேசுரனுடைய பீடத்தின் முன் பிரவேசிப்பேன். எனது வாலிபத்தை மகிழ்ச்சிப்படுத்துந் தேவனிடத்தில் (பிரவேசிப்பேன்).

குரு. Confitebor tibi in citara, Deus, Deus meus: quare tristis es, anima mea? et quare conturbas me?

தேவனே, என் தேவனே, உம்மைச் சுரமண்டலத்தாற் றுதிப்பேன்; என்னாத்துமமே, நீ ஏன் வியாகுலமாயிருக்கிறாய்? ஏன் எனக்குக் கலக்கம் வருவிக்கிறாய்?

பரி. Spera in Deo, | quoniam adhuc confitebor illi: | salutare vultus mei, et Deus meus.

சருவேசுரன்பேரில் நம்பிக்கை கொள்ளு. ஏனெனில் அவரை இன்னுந் துதிப்பேன். என் முகத்துக்கு இரட்சிப்பும் என் தேவனும் அவரே.

குரு. Gloria Patri, et Filio, et Spiritui Sancto.

பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்து சாந்துவுக்கும் தோத்திரம் உண்டாகக்கடவது.

பரி. Sicut erat in principio, et nunc, et semper, | et in sæcula sæculorum. Amen.

ஆதியில் ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அநாதி சதாகாலமும் ஆகக்கடவது ஆமென்.

குரு. Introibo ad altare Dei.

சருவேசுரனுடைய பீடத்தின் முன் பிரவேசிப்பேன்.

பரி. Ad Deum, qui lætificat | juventutem meam.

எனது வாலிபத்தை மகிழ்ச்சிப் படுத்தும் தேவனிடத்தில் (பிரவேசிப்பேன்.)

## 3. பாவசங்கீர்த்தனம்

குரு. Adjutorium nostrum in nomine Domini.

ஆண்டவருடைய திரு நாமத்தினாலே நமக்குச் சகாயம் வரும்.

பரி. Qui fecit cœlum | et terram.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தவருடைய (நாமத்தினாலே.)

குரு. Confiteor Deo omnipotenti.......

சருவத்துக்கும் வல்ல சருவேசுரனுடனேயும்......

பரி. Misereatur tui omnipotens Deus, | et dimissis peccatis tuis, | perducat te ad vitam æternam.

சருவத்துக்கும் வல்ல சருவேசுரன் உமது மேல் இரக்கங்கொண்டு, உமது பாவங்களைப் பொறுத்து, உம்மை நித்திய சீவியம் அடையச் செய்வாராக.

குரு. Amen.

ஆமென்.

பரி. Confiteor Deo omnipotenti, | beatæ Mariæ semper Virgini,| beato, Michæli Archangelo, | beato Joanni Baptistæ, | sanctis Apostolis Petro et Paulo, | omnibus Sanctis, et tibi pater.

சருவத்துக்கும் வல்ல சருவேசுரனுடனேயும், | எப்போதும் கன்னிகையாயிருக்கிற மோட்சவாசி மரியாயுடனேயும், | மோட்சவாசி அதிதூதன் மிக்கேலுடனேயும், | மோட்சவாசி ஸ்நாபக யுவாணியுடனேயும், | அப்போஸ்தலராயிருக்கிற அர்ச். பேதுருவுடனேயும் பாவுலுவுடனேயும், | சகல அர்ச்சியசிஷ்டர்களுடனேயும் | எனக்குக் குருவாயிருக்கிற உம்முடனேயும் | பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறேன்.

Quia peccavi nimis cogitatione, verbo, et opere, | mea culpa, mea culpa, mea maxima culpa.

அது ஏனென்றால் என் சிந்தனையினாலும் வாக்கினாலும் கிரியையினாலும் மகா பாவங்களைச் செய்தேனே. | என் பாவமே! என் பாவமே! என் பெரும் பாவமே!

Ideo precor beatam Mariam semper Virgi-

ஆகையால் எப்போதும் கன்னிகையாயிருக்கிற மோட்சவாசி

nem, | beatum Michælem Archangelum, | beatum Joannem Baptistam | sanctos Apostolos Petrum et Paulum, | omnes Sanctos et te pater, | orare pro me ad Dominum Deum nostrum.

மரியாயையும், | மோட்சவாசி அதிதூதன் மிக்கேலையும், | மோட்சவாசி ஸ்நாபக யுவானியையும், | அப்போஸ்தலராகிய அர்ச்சியசிஷ்ட பேதுருவையும் பாவுலுவையும், | சகல அர்ச்சியசிஷ்டர்களையும், | எனக்குக் குருவாயிருக்கிற உம்மையும் | எனக்காக என் கர்த்தாவாகிய சருவேசுரனிடத்தில் வேண்டிக்கொள்ள வேணுமென்று மன்றாடுகிறேன்.

குரு. Misereatur vestri omnipotens Deus, et dimissis peccatis vestris perducat vos ad vitam æternam.

சருவத்துக்கும் வல்ல சருவேசுரன் உங்கள்மேல் இரக்கங்கொண்டு உங்கள் பாவங்களைப் பொறுத்து உங்களை நித்திய சீவியமடையச் செய்வாராக.

பரி. Amen.

ஆமென்.

குரு. Indulgentiam, absolutionem, et remissionem peccatorum nostrorum tribuat nobis omnipotens et misericors Dominus.

சருவத்துக்கும் வல்ல தயாபரரான சருவேசுரன் எம் பாவங்களுக்கு இளக்காரத்தையும் பொறுத்தலையும் மன்னிப்பையுங் கட்டளையிட்டருள்வாராக.

பரி. Amen.

ஆமென்.

குரு. Deus, tu conversus vivificabis nos.

ஆண்டவரே, தேவரீர் திரும்பி எங்களை உயிர்ப்பிப்பீர்.

பரி. Et plebs tua | lætabitur in te.

உமது சனமும் உம்மிடத்தில் ஆனந்தங்கொள்ளும்.

குரு. Ostende nobis Domine, misericordiam tuam.

ஆண்டவரே, உமது இரக்கத்தைக் காண்பித்தருளும்.

பரி. Et salutare tuum da nobis.

உமது இரட்சணியத்தை எங்களுக்குத் தாரும்.

| | |
|---|---|
| குரு. Domine, exaudi orationem meam. | ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும். |
| பரி. Et clamor meus ad te veniat. | எனது அபய சத்தம் உமது சன்னதிமட்டும் வரக்கடவது. |
| குரு. Dominus vobiscum. | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. Et cum spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |

## † 4. பீடத்தை நோக்கி ஏறுதல்.

### பிரார்த்திக்கக்கடவோம் :

ஆண்டவரே, மகா பரிசுத்த தலத்துள் சுத்த மனங்களுடன் நாங்கள் பிரவேசிக்கும்பொருட்டு எங்கள் அக்கிரமங்களை எங்களிடத்திலிருந்து எடுத்தருளும். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து காரண காட்சியாக. ஆமென்.

## 5. பீடத்தை முத்திசெய்தல்

ஆண்டவரே, தேவரீர் என் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு அருளக் கருணையாகவேண்டும் என்று இங்கு எவ்தெந்த அர்ச்சியசிஷ்டர்களுடைய பரிசுத்த மீதிகள் இருக்கின்றனவோ அவர்களுடையவும் சகல அர்ச்சியசிஷ்டர்களுடையவும் பெறு பேறுகளைக் குறித்து உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## 6. பிரவேச வாக்கியம்

[இது நாளுக்குநாள் வேறுபடும்]

நித்தியமும் பரலோக பூலோகங்களை ஆளும் மன்னவனைப் பெற்றெடுத்த கன்னிசுத்த தாயே, வாழ்க !

---

† பாடற்பூசையில் மாத்திரம் எழுந்து நிற்றல்.

**சங்.**—என் இருதயம் ஒரு நல்ல வார்த்தையை வெளியிட்டது; எனது செயல்களை இராசாவுக்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரம் உண்டாகக்கடவது.

ஆதியில் ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அநாதிசதாகாலமும் ஆகக்கடவது. ஆமென்.

நித்தியமும் பரலோக பூலோகங்களை ஆளும் மன்னவனைப் பெற்றெடுத்த கன்னிசுத்த தாயே வாழ்க!

## 7. கிருபை கேட்டல்

[பாடற்பூசையில் "சுவாமி கிருபையாயிரும், சம்மனசுகளின் கானம், உரைக்கீதம், விசுவாசப் பிரமாணம்" பாடும் வேளையில் குருவானவர் உட்கார்ந்தால், சனங்களும் உட்காரலாம்]

| | | |
|---|---|---|
| குரு. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |
| பரி. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |
| குரு. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |
| பரி. | Christe eleison | கிறீஸ்துவே கிருபையாயிரும் |
| குரு. | Christe eleison | கிறீஸ்துவே கிருபையாயிரும் |
| பரி. | Christe eleison | கிறீஸ்துவே கிருபையாயிரும் |
| குரு. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |
| பரி. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |
| குரு. | Kyrie eleison | சுவாமி கிருபையாயிரும் |

## 8. சம்மனசுகளின் கானம்

[இது ஞாயிறுப்பூசையிலும் திருநாள் பூசையிலும் சொல்லப்படும்].

| | |
|---|---|
| 1. Gloria in excelsis Deo: \| et in terra pax hominibus bonæ voluntatis. | உன்னதங்களிற் தேவனுக்கு மகிமையும் \| பூமியில் நற்சித்தமுள்ள மனிதருக்குச் சமாதானமும் உண்டாவதாக. |

| | |
|---|---|
| 2. Laudamus te | நாங்கள் உம்மைப் புகழுகிறோம். |
| 3. Benedicamus te | உம்மை வாழ்த்துகிறோம். |
| 4. Adoramus te | உம்மை ஆராதிக்கிறோம். |
| 5. Glorificamus te | உம்மை மகிமைப்படுத்துகிறோம். |
| 6. Gratias agimus tibi \| propter magnam gloriam tuam. | தேவரீர் மகா பிரதாபம் நிறைந்தவராகையால் \| உமக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துகிறோம். |
| 7. Domine Deus, Rex cœlistis, \| Deus Pater omnipotens. | பரலோக இராயனான தேவனே, சுவாமி, \| சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரா! |
| 8. Domine Fili unigenite \| Jesu Christe. | ஏகமாய்ச் சனித்தவராகிய சுவாமி, \| யேசுக்கிறீஸ்துவே! |
| 9. Domine Deus, Agnus Dei, \| Filius Patris, | தேவ சுதனே, \| செம்மறிப்புருவையாகிய தேவனே, சுவாமி! |
| 10. Qui tollis peccata mundi, \| miserere nobis. | உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே, \| எங்கள்பேரில் இரக்கமாயிரும். |
| 11. Qui tollis peccata mundi \| suscipe deprecationem nostram. | உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே, \| எங்கள் விண்ணப்பத்தை ஏற்றருளும். |
| 12. Qui sedes ad dexteram Patris \| miserere nobis. | பிதாவின் வலப்பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, \| எங்கள்பேரில் தயவாயிரும். |
| 13. Quoniam tu solus sanctus. | ஏனெனில் நீரே பரிசுத்தர். |
| 14. Tu solus Dominus; | நீரே கர்த்தர். |
| 15. Tu solus altissimus, \| Jesu Christe. | நீரே உன்னதமானவர், \| யேசுக்கிறீஸ்துவே, |
| 16. Cum Sancto Spiritu, \| in gloria Dei Patris. | இஸ்பிரீத்துசாந்துவோடு \| பிதாவாகிய சருவேசுரனின் மகிமையில் (இருக்கிறவரே). |
| 17. Amen. | ஆமென். |

## † * 9. சபைச் செபம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்].

குரு. Dominus vobiscum. கர்த்தர் உங்களுடனே.

பரி. Et cum spiritu tuo. உமது ஆத்துமத்துடனேயும்.

**பிரார்த்திக்கக்கடவோம்**

கர்த்தராகிய சருவேசுரா, உமது அடியோராகிய நாங்கள் எப்போதும் ஆத்தும சரீர சுகத்தை அனுப விக்கிறவர்கள் ஆகி, நித்திய கன்னியான பரிசுத்த மரி யாயின் மாட்சிமையுள்ள வேண்டுதலினுல் இம்மையிற் துன்பங்களில் நின்று விடுதலை பெறவும் நித்திய இன் பத்தை அடையவும் தயை செய்தருளவேணுமென்று தேவரீரை மன்ருடுகிறேரும். தேவரீரோடு இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தில் சதாகாலம் சீவியராய் இராட் சிய பரிபாலனம்பண்ணுகிற தேவரீருடைய சுதனுகிய எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக.

பரி. Amen. ஆமென்.

# II. மனவெளிச்சப் பகுதி

## ‡ 10. நிருபம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்.]

அர்ச். அருளப்பரின் முதலாம் நிருபத்தின் வாசிப்பு: சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால், அதைப்பற்றி நீங்கள் அதிசயப்படவேண்டாம். நாம் சகோதரரைச் சிநேகிக்கிறபடியால் மரணத்தினின்று

---

† சாதாரண பாடற்பூசையில் எழுந்து நிற்றல்.

* மரித்தோரின் பாடற்பூசையில் முழந்தாள் இடுதல்.

‡ பாடற்பூசையில் மாத்திரம் உட்காருதல்.

நீங்கி, சீவியத்துக்குட்பட்டிருக்கிறோமென்று அறிவோம். சிநேகியாதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான். ஆகையால் தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் கொலைபாதகன். ஆனால் எந்தக் கொலைபாதகனும் தனக்குள் நிலைமையான நித்திய சீவியத்தைக் கொண்டிருக்கிறதில்லை என்று அறிவீர்கள்.

சருவேசுரன் நமக்காகத் தம்முயிரைக் கொடுத்ததினால், அவருடைய அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். ஆதலால் நாமும் சகோதரருக்காக நம்முயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வுலக சம்பத்தையுடைய ஒருவன் தன் சகோதரன் இக்கட்டுப்படுகிறதைக் கண்டும், அவனுக்கு (இரங்காமல்) தன்னுள்ளத்தை மூடிக்கொண்டால், தேவசிநேகம் அவனிடத்தில் நிலைப்பதெப்படி? பிள்ளைகளே, நம்முடைய சிநேகம் வார்த்தையிலும் நாவிலும் இராமல், கிரியையிலும் உண்மையிலும் இருக்கவேண்டியது.

பரி. Deo gratias. சருவேசுரனுக்குத் தோத்திரம்.

## 11. ஆரோகண கீதம்

[இது நாளுக்குநாள் வேறுபடும்]

கன்னிமரியாயே நீர் பாக்கியவதி; ஆசாரத்துக்குரியவர். உமது கன்னிமைக்கு ஒரு பங்கமும் இல்லாமல் எங்கள் மீட்பரின் தாயாய் வரலானீரே. கடவுளின் கன்னித்தாயே உலக முழுதிலும் அடங்காதவர் மனிதனாய் வந்து, உமது திருவுதரத்தில் அடங்கினாரே.

அல்லேலூயா, அல்லேலூயா. பெற்ற பின்னும் கன்னிமை அழியாப் புண்ணியவதியாய் நிலைபெற்ற தேவதாயே எங்களுக்காக மனுப்பேசியருளும். அல்லேலூயா.

## 12. உரைக்கீதம்

[இது திருநாளுக்குத் திருநாள் வேறுபட்டு, சில பெரிய திருநாட்களில் மாத்திரம் வழங்கும். பின்வரும் உரைக்கீதம் மரித்தோரின் பூசைகளில் சொல்லப்படும்.]

| | |
|---|---|
| 1. Dies iræ, dies illa, | தேவ கோப நாள் அந்நாளே ; |
| Solvet sæclum in favilla : | தாவீத், சீபில் சொன்னவாறே |
| Teste David cum Sibylla. | லோகம் சாம்பராகும் நாளே. |
| 2. Quantus tremor est futurus, | பாவ புண்ணியக் கணக்கை |
| Quando judex est venturus, | தேவன் வந்து தீர்க்கும் வேளை |
| Cuncta stricte discussurus ! | யாவரோ நடுக்குறாரே ? |
| 3. Tuba mirum spargens sonum | கல்லறைதோறும் முழங்கும் |
| Per sepulcra regionum, | காளவோசை, நீதவான் முன் |
| Coget omnes ante thronum. | எல்லோரையும் ஈர்த்திடுமே. |
| 4. Mors stupebit et natura, | ஆவி உடலோ டெழுந்து |
| Cum resurget creatura, | தேவ சமுகத்திற் தோற்ற, |
| Judicanti responsura. | சாவும் யாவுமே நடுங்கும். |
| 5. Liber scriptus proferetur, | நன்று தீதெல்லாம் வரைந்த |
| In quo totum continetur, | நல்ல புத்தகம், தப்பாமல், |
| Unde mundus judicetur. | அன்று தீர்வைக்காய் வருமே. |
| 6. Judex ergo cum sedebit, | நீதன் நடுக்கேட்கும் போது |
| Quidquid latet apparebit : | யாதும் மறைவா யிராது ; |
| Nil inultum remanebit. | தீது தப்பிப் போய் விடுமோ ? |
| 7. Quid sum miser tunc dicturus ? | சுத்தவாளரும் நடுங்கும் |
| Quem patronum rogaturus ? | அத்தருணம் நான் என் செய்வேன் ! |
| Cum vix justus sit securus ? | ஆர் சரணம் தேடுவேனோ ! |
| 8. Rex tremendæ majestatis, | இட்டம் போல் எவர் தமையும் |
| Qui salvandos salvas gratis, | ரட்சிக்கும் தயைக் கடலே, |
| Salva me fons pietatis. | என்னையும் கடைக்கண் பாரும். |
| 9. Recordare Jesu pie, | எந்தனக்காய், யேசுவே, நீர் |
| Quod sum causa tuæ viæ : | இவ்வுலகிலே வந்திரே ; |
| Ne me perdas illa die. | ஏழையைத் தள்ளாமற் காரும். |

| | | |
|---|---|---|
| 10. | Quærens me sedisti lassus :<br>Redemisti crucem passus :<br>Tantus labor non sit cassus. | தேடி என்னை வாடி நின்றீர் ;<br>பாடுபட்டென்னை ரட்சித்திர் ;<br>கேடுறலாமோ ஈதெல்லாம் ! |
| 11. | Juste judex ultionis,<br>Donum fac remissionis<br>Ante diem rationis. | திர்வை நாள் வருமுன்னேயே,<br>தேவ நீதவானே, என்தன்<br>பாவம் பொறுப்பீரே ஸ்வாமி. |
| 12. | Ingemisco tamquam reus :<br>Culpa rubet vultus meus :<br>Supplicanti parce Deus. | கள்ளனைப் போலே விழித்து<br>கர்த்தாவே, கலங்குகின்றேன் ;<br>காதகன் பவம் பொறுப்பீர். |
| 13. | Qui Mariam absolvisti,<br>Et latronem exaudisti,<br>Mihi quoque spem dedisti. | மக்தலேன் பிழை மன்னித்திர் ;<br>மன்றாடுங் கள்வனைக் காத்திர் ;<br>வைப்பீர் என்மேலும் தயவு. |
| 14. | Preces meæ non sunt dignæ :<br>Sed tu bonus fac benigne,<br>Ne perenni cremer igne. | என் செபங்கள் ஈனமென்று,<br>யேசுவே, நீர் தள்ளிடாமல்<br>வன் நரகால் என்னை மீளும். |
| 15. | Inter oves locum præsta,<br>Et ab hœdis me sequestra,<br>Statuens in parte dextra. | செம்மலிகளோடு என்னைச்<br>சேரும் வலப் பாகந்தன்னில் ;<br>சேராதிர் கடாக்களோடே. |
| 16. | Confutatis maledictis,<br>Flammis acribus addictis,<br>Voca me cum benedictis. | துட்டர்களைத் தீ நரகிற்<br>துன்புறவே தள்ளி, என்னைச்<br>சிட்டருடன் சேர்த்தருளும். |
| 17. | Oro supplex et acclinis,<br>Cor contritum quasi cinis :<br>Gere curam mei finis. | நைந்திருதயம் நொறுங்கி<br>நன்மனதாய் வேண்டும் என்னை<br>அந்தியநேரம் கை தூக்கும். |
| 18. | Lacrimosa dies illa,<br>Qua resurget ex favilla,<br>Judicandus homo reus. | பாவி அன்றுயிர்த்தெழுந்து<br>தேவ நடுவர் முன் ஏக<br>பார்ப்பதோ மா கண்ணருவி ! |
| 19. | Huic ergo parce Deus :<br>Pie Jesu Domine,<br>Dona eis requiem. | பண்ணும், தேவனே, தயவு<br>காருண்ணிய யேசுவே<br>தாரும் அவர்க் காறுதல். |
| 20. | Amen. | ஆமென். |

## 13. ஆசி கேட்டல்

[சுவிசேஷம் வாசிக்குமுன் குரு குனிந்து நின்று சொல்லுவது :]

இசையாஸ் தீர்க்கதரிசியின் உதடுகளை எரியும். அக்கினித் தழலைக்கொண்டு சுத்திகரிக்கத் திருவுள மான சருவத்துக்கும் வல்ல சர்வேசுரா, தேவரீர் அடியேன் இருதயத்தையும் உதடுகளையுங்கூடச் சுத்தி கரித்து உமது பரிசுத்த சுவிசேஷத்தை அடியேன் தக்கவிதமாய் வசனிக்கும்படிக்கு என்னை உமது தய வுள்ள இரக்கத்தினுல் வல்லவனுக்கும். எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக ஆமென்.

[பின்வரும் ஜெபம் மரித்தோர் பூசையில் சொல்லப்படுவதில்லை.]

ஆண்டவரே, ஆசீர்வாதம் கட்டளையிட்டருளும்.

ஆண்டவருடைய சுவிசேஷத்தை நான் பாத்திர மாகவும் தக்கவிதமாகவும் வசனிக்கும்படிக்கு அவர் என் இருதயத்திலும் உதடுகளிலும் இருந்தருளுவா ராக ஆமென்.

## †† 14. சுவிசேஷம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்]

| | |
|---|---|
| குரு. **Dominus vobiscum.** | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. **Et cum spiritu tuo.** | உமது ஆத்துமத்துடனேயும். |
| குரு. **Sequentia** (*vel initium*) **sancti Evangelii secundum N.** | மத்தேயு எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சியாவது. |
| பரி. **Gloria tibi, Domine.** | ஆண்டவரே உமக்குத் தோத்திரம். |

அந்தக்காலத்திலே: யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது:

மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில் மோட்ச இராட்சியம் அவர்களுடையது.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.

அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் திருப்தியடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் இரக்கமடைவார்கள்.

தூய இருதயமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் தேவ மக்கள் என்னப்படுவார்கள்.

நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் மோட்ச இராச்சியம் அவர்களுடையது.

பரி. **Laus tibi Christe.** கிறீஸ்துவே உமக்குப் புகழ்ச்சி ஆகுக.

சுவிசேஷ வார்த்தைகளின் பலத்தால் எங்கள் பாவங்கள் எல்லாம் கழுவப்படக்கடவது.

## †† **15.** நிசேயா விசுவாசப் பிரமாணம்

[இது ஞாயிற்றுக்கிழமைகளிலும், கர்த்தர், தேவதாயார், அப்போஸ்தலர்கள், வேதபாரகர்கள் எனும் இவர்கள் திருநாட்களிலும், வேறு சில திருநாட்களிலும் சொல்லப்படும்.]

1. Credo in unum Deum, | Patrem omnipotentem, factorem cœli et terræ, | visibilium omnium et invisibilium.

பரலோகத்தையும் பூலோகத்தையும் திரிசியமானவைகளையும் அதிரிசியமானவைகளையும் படைத்த | சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய ஒரே சருவேசுரனை விசுவசிக்கிறேன்.

2. Et in unum Dominum Jesum Christum Filium Dei unigenitum,

மேலும் சருவேசுரனுடைய ஒரே பேறான சுதனும் | ஏக ஆண்டவருமாகிய யேசுக்கிறீஸ்துவையும் விசுவசிக்கிறேன்.

3. Et ex Patre natum ante omnia sæcula,

இவர் சதா காலங்களினும் முன் | பிதாவிடத்தில் நின்று பிறந்தார்.

4. Deum de Deo; Lumen de Lumine; | Deum verum de Deo vero;

இவர் தேவனிற் தேவன், வெளிச்சத்தில் வெளிச்சம், | மெய்யான தேவனில் மெய்யான தேவன்.

5. genitum non factum; consubstantialem Patri, | per quem omnia facta sunt.

உண்டாக்கப்பட்டவர் அல்ல பிறந்தவர், | பிதாவோடு ஒரே வஸ்துவானவர். | இவர் மூலமாகவே சகலமும் உண்டாக்கப்பட்டன.

6. Qui propter nos homines, et propter nostram salutem, | descendit de cœlis,

இவர் மனுஷராகிய எங்களுக்காகவும் எங்கள் மீட்புக்காகவும் | பரலோகத்திநின்று இறங்கினார்.

7. Et incarnatus est de Spiritu Sancto, ex Maria Virgine: | et homo factus est.

பரிசுத்த ஆவியினால் கன்னி மரியம்மாளிடத்தில் | மாமிச ஐக்கியமாகி ** **மனுஷனானார்.**

8. Crucifixus etiam pro nobis: sub Pontio Pilato | passus et sepultus est.

†† பின்னும் எங்களுக்காகப் போஞ்சியு பிலாத்துவின்கீழ் சிலுவையில் அறையப்பட்டுப் | பீடையுற்று அடக்கப்பட்டார்.

9. Et resurrexit tertia die | secundum Scripturas;

வேதாகமங்களின்படியே | மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

10. Et ascendit in cælum | sedet ad dexteram Patris:

பரமண்டலங்களில் ஏறி | பிதாவின் வலதில் உட்கார்ந்திருக்கிறார்.

11. Et iterum venturus est cum gloria judicare vivos et mortuos | cujus regni non erit finis.

சீவியர்களையும் மரித்தவர்களையும் நடுத்தீர்க்க | மறுபடியும் பிரதாபத்தோடு வரவிருக்கிறார். | அவருடைய இராச்சியத்துக்கோ முடிவிராது,

12. Et in Spiritum Sanctum Dominum et vivificantem, | qui ex Patre Filioque procedit;

மேலும் பிதாவிடத்திலும் சுதனிடத்திலும் நின்று புறப்படுகிற கர்த்தரும் | உயிர்ப்பிக்கிறவருமாகிய பரிசுத்த ஆவியையும் விசுவசிக்கிறேன்.

13. Qui cum Patre et Filio simul adoratur et conglorificatur: qui locutus est per prophetas.

இவர் பிதாவோடும் சுதனோடுங்கூட ஒருங்கே ஆராதிக்கப்பட்டு | மகிமைப்படுத்தப்படுகிறவரும், | தீர்க்கதரிசிகள் மூலமாய்த் திருவாய் மலர்ந்தவருமாம்.

14. Et unam sanctam Catholicam | et Apostolicam Ecclesiam.

மேலும் ஒன்றான பரிசுத்த கதோலிக்க | அப்போஸ்தொலிக்க திருச்சபையையும் விசுவசிக்கிறேன்.

15. Confiteor unum baptisma | in remissionem peccatorum.

பாவ மன்னிப்பாகவுள்ள | ஒரே ஞானஸ்நானத்தையும் அறிக்கையிடுகிறேன்.

16. Et expecto | resurrectionem mortuorum,

மரித்தவர்களுடைய உத்தானத்தையும்,

| | |
|---|---|
| 17. Et vitam venturi sæculi. | வரப்போகிற உலகத்தின் சீவியத்தையும் \| நம்பிக் காத்திருக்கிறேன். |
| 18. Amen. | ஆமென். |

## III. காணிக்கைப் பகுதி

### ‡ 16. காணிக்கை வாக்கியம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்]

| | |
|---|---|
| குரு. Dominus vobiscum. | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. Et cum Spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |

**பிரார்த்திக்கக்கடவோம்**

வாழ்க மரியே, பிரியப்பிரசாத பூரணியே! கர்த்தர் உம்முடனே; ஸ்திரிகளுக்குள் ஆசிர்வதிக்கப்பட்டவள் நீரே, உம்முடைய திருவுதரத்தின் கனியும் ஆசிர்வதிக்கப்பட்டதாமே.

### 17. அப்பத்தைக் காணிக்கையாக்குதல்

பரிசுத்த பிதாவே, எல்லாம் வல்ல நித்திய சருவேசுரா, | தேவரீருடைய அபாத்திர ஊழியனுகிய அடியேன் கணக்கற்ற எனது பாவ துரோகங்கள் அசட்டைத்தனங்களுக்காகவும், | சூழ நிற்கின்ற சகலருக்காகவும் | சீவியரும் மரித்தோருமான சகல கிறீஸ்த விசுவாசிகளுக்காகவும் | எனக்கும் அவர்களுக்கும் இரட்சணியமும் நித்திய சீவியமும் கிடைக்

---

‡ பாடற் பூசையில் மாத்திரம் உட்காருதல். வாசகப் பூசையைப்பற்றி ஒன்றும் சொல்லாத வேளைகளில் முழந்தாள் இடவேண்டும்; ஆனுல் 16-ம் இலக்கம் துவக்கி 26-ம் இலக்கம் மட்டும் உட்காரலாம்.

கும்படிக்கும் | சீவியரும் சத்தியமுள்ளவரும் என் தேவனுமாகிய தேவரீருக்கு | ஒப்புக்கொடுக்கிற இந்த மாசில்லாத பலிப்பொருளை ஏற்றருளும். | ஆமென்.

## 18. தண்ணீரை ஆசீர்வதித்தல்

மனுச் சுபாவமாகிய பொருளை ஆச்சரியமானவிதமாய் உருவாக்கினவரும் இன்னும் அதி ஆச்சரியவிதமாய் அதைப் புதுப்பித்தவருமாகிய சருவேசுரா, எங்கள் மனுச்சுபாவத்திலே பங்குபற்றத் திருவுளமான உம்முடைய சுதனாகி யேசுக்கிறீஸ்துநாதருடைய தெய்வ சுபாவத்திலே நாங்களும் இந்த முந்திரிகை இரச தண்ணீர்களின் இரகசியத்தினால் பங்கு பற்றத் தக்கவர்களாகக் கிருபைபண்ணியருளும். இவர் தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சதாகாலம் சீவியராயும் இராச்சியபரிபாலனம் பண்ணுகிறவராயுமிருக்கிற சருவேசுரனேயாம். ஆமென்.

## 19. பாத்திரத்தைக் காணிக்கையாக்குதல்

ஆண்டவரே நாங்கள் இரட்சணியத்தின் பாத்திரத்தைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுத்து, அது தேவரீருடைய தெய்வீக மகத்துவத்தின் சமுகத்தே எங்கள் இரட்சணியத்துக்காகவும் முழு உலோகத்தினும் இரட்சணியத்துக்காகவும் மதுரமான சுகந்தமயமாய் எழும்பத்தக்கதாகக் கிருபைசெய்யவேண்டுமென்று உமது தயாளத்தை மன்றாடுகிறோம். ஆமென்.

## 20. "ஆண்டவரே தாழ்ச்சியுள்ள"

ஆண்டவரே தாழ்ச்சியுள்ள மனதோடும் மனஸ்தாபமுள்ள ஆத்துமத்தோடும் வருகிற நாங்கள்

தேவரீரால் ஏற்றுக்கொள்ளப்படவும், எங்கள் பலியானது, தேவனே, உமக்கு உகப்பாயிருக்கத்தக்கதாய் உமது சமுகத்திலே இன்று நடைபெறவுங்கடவது சுவாமி.

## 21. காணிக்கையை ஆசீர்வதித்தல்

பரிசுத்தப்படுத்துகிறவரே, சருவத்துக்கும் வல்ல நித்திய தேவனே, | தேவரீர் எழுந்தருளிவந்து | உம்முடைய திவ்வியநாம மகிமைக்காக ஆயத்தப்படுத்திய | இப்பலியை ஆசீர்வதித்தருளும்.

[பாடற் பூசையில் தூபங்காட்டுதல் முடியுமட்டும் எழுந்துநிற்கவேண்டும்]

## 22. கை கழுவுதல் (25-ம் சங்.)

ஆண்டவரே, நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி உம்முடைய அதிசயங்களையெல்லாம் விபரிப்பதற்காக உத்தமர்களின் நடுவில் என் கரங்களைக் கழுவி உமது பீடத்தைச் சுற்றிவருவேன்.

ஆண்டவரே, உமது வீட்டின் அலங்காரத்தையும் உமது மகிமை யிருக்கிற இடத்தையும் விரும்பினேன்.

சருவேசுரா ! என் ஆத்துமாவை அவபத்தியுள்ளவர்களோடும், என் சீவனை இரத்தப் பிரியரோடும் போக்கடியாதேயும்.

அவர்களுடைய கைகளில் தோஷங்களிருக்கின்றன. அவர்கள் வலது கை இலஞ்சத்தால் நிறைந்திருக்கின்றது. நானோ கபடற்றவனாய் நடந்தேன், என்னை மீட்டு என்பேரில் இரக்கம்புரியும்.

என் கால் செவ்வழியில் உறுதியாயிருந்தது. ஆண்டவரே சபைக்கூட்டங்களில் உம்மைத் துதிப்பேன்.

பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரம் உண்டாகக்கடவது.

ஆதியில் ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அனாதி சதாகாலமும் ஆகக்கடவது. ஆமென்.

## 23. பொதுக் காணிக்கை

பரிசுத்த திரீத்துவமே, அடியோர் எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவின் பாடுகளுக்கும் உத்தானத்துக்கும் பரலோக ஆரோகணத்துக்கும் ஞாபகமாகவும், எப்போதுங் கன்னிகையாகிய மரியம்மாள், ஸ்நாபக யுவானியார், அர்ச்சியசிஷ்ட அப்போஸ்தலராகிய, பேதுரு பாவுலு என்னும் இவர்களோடு சகல அர்ச்சியசிஷ்டர்களுக்கும் புகழ்ச்சியாகவும் தேவரீருக்குச் செலுத்துகிற இக்காணிக்கையை ஏற்றருளும். இது அவர்களுடைய புகழ்ச்சிக்கும் எங்கள் இரட்சணியத்துக்கும் ஏதுவாயிருக்கவும், இவ்வுலகத்தில் எங்களால் நினைவுகூறப்படுகிற அவர்கள் பரலோகத்தில் எங்களுக்காக வேண்டிக்கொள்ளவுங்கடவார்கள். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து தாமே காரண காட்சியாக. ஆமென்.

## 24. சபையின் மன்றட்டு

குரு. Orate fratres ut meam ac vestrum sacrificium acceptabile fiat apud Deum Patrem omnipotentem.

சகோதரரே என்னுடையவும் உங்களுடையவும் பலியானது சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய சருவேசுரனுக்கு உகப்பாயிருக்கத்தக்கதாக மன்றுடுங்கள்.

பரி. Suscipiat Dominus | sacrificium de manibus tuis, | ad laudem et gloriam nominis sui, | ad utilitatem quoque nostram, | totiusque Ecclesiæ suæ sanctæ.

சருவேசுரன் தமது திருநாமத்தின் தோத்திர மகிமைக்காகவும், | எங்களுடையவும் சர்வ திருச்சபையுடையவும் நன்மைக்காகவும் | உமது கைகளினின்று இப்பலியை ஏற்றுக்கொள்வாராக.

குரு. Amen.

ஆமென்.

## 25. ஏகாந்த சேபம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்]

ஆண்டவரே, தேவரீருடைய அநுக்கிரகத்தினு லும் நித்திய கன்னிகையான முத்திப்பேறுபெற்ற மரியாயின் வேண்டுதலினுலும் இந்தத் திருக் காணிக்கையானது எங்களுக்கு இப்போதும் வருங்காலத்திலும் நல்வாழ்வுக்கும் சமாதானத்துக்கும் காரணமாகக்கடவது. தேவரீருடைய சுதனுகிய எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக இதைத் தந்தருளும். இவரே தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சீவியராய் இராட்சிய பரிபாலனம் பண்ணுகிருவர்.

# IV. தேவ வசீகரப் பகுதி

## † 26. முகவுரை

[இது காலத்துக்கு காலம், திருநாளுக்குத் திருநாள், வேறுபடும். பின்வரும் முகவுரை விசேஷ முகவுரை இல்லாத காலத்தில் அல்லது திருநாளில் சொல்லப்படும்.]

| | |
|---|---|
| குரு. Per omnia sæcula sæculorum. | முடிவில்லாத சதாகாலமுமாக. |
| பரி. Amen. | ஆமென். |
| குரு. Dominus vobiscum. | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. Et cum spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |
| குரு. Sursum corda. | இருதயங்களை மேலெழுப்புங்கள். |
| பரி. Habemus ad Dominum. | கர்த்தரை நோக்கி எழுப்பியிருக்கிறோம். |

குரு. Gratias agamus Domino Deo nostro. — எங்கள் கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவோமாக.

பரி. Dignum et justum est. — அது தகுதியும் நீதியுமேயாம்.

நாங்கள் தேவரீருக்கு எப்போதும் எவ்விடத்திலும் எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் மூலமாய் நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்துவதானது, பரிசுத்த கர்த்தரே, சருவத்துக்கும் வல்ல பிதாவே, நித்திய சருவேசுரா, உண்மையாகவே தகுதியும் நீதியுமாம், நியாயமும் நன்மையானதுமாமே. எங்கள் ஆண்டவராகிய இவர் மூலமாகவே தேவரீருடைய மகிமைப் பிரதாபத்தைத் தூதர்கள் துதிக்கிறூர்கள், நாதகிருத்தியர் ஆராதிக்கிறூர்கள், சத்துவகர் கண்டு நடுநடுங்குகிறூர்கள். வானங்களும் வானங்களின் பலவர்த்தர்களும் பாக்கியவந்தரான பத்திச்சுவாலகர்களும் ஒன்றுகூடி மங்கள சோபனங்களோடு கொண்டாடுகிறூர்கள். இத்துதிகளோடு எங்கள் குரல்களுஞ் சேர்ந்து அத்தியந்த தாழ்மையாய் அறிக்கையிட்டுப் பின்வருகிறபடி சொல்ல உத்தரவு கட்டளையிடவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

## * 27. பரிசுத்தர் பரிசுத்தர்

1. Sanctus, sanctus. — பரிசுத்தர், பரிசுத்தர்.

2. Sanctus Dominus Deus sabaoth. — தளங்களின் தேவனுகிய கர்த்தர் பரிசுத்தர்.

3. Pleni sunt cœli et terra gloria tua. — பரலோகமும் பூலோகமும் தேவரீருடைய மகிமையினுல் நிறைந்திருக்கின்றது.

---

* மரித்தோரின் பாடற்பூசையில் 27-ம் இலக்கம் துவக்கி 43-ம் இலக்கம் மட்டும் முழந்தாள் இடுதல்.

| | |
|---|---|
| 4. Hosanna in excelsis. | உன்னதங்களில் ஓசன்ன. |
| 5. Benedictus qui venit in nomine Domini. | கர்த்தருடைய நாமத்தினல் வருகிறவர் \| ஆசீர்வதிக்கப்பட்டவர். |
| 6. Hosanna in excelsis. | உன்னதங்களில் ஓசன்ன. |

## * 28. திருச்சபையின் ஞாபகம்

இப்போது மகா தயவுள்ள பிதாவே, நாங்கள் தேவரீருடைய பரிசுத்த கத்தோலிக்க சபைக்காக விசேஷமாய் ஒப்புக்கொடுக்கின்ற இந்தக் கொடைகளை இந்தக் காணிக்கைகளை, இந்த மாசற்ற திருப்பலிகளைத் தேவரீர் அங்கீகரித்து ஆசீர்வதிக்கவேண்டுமென்று எங்களாண்டவரும் தேவரீருடைய சுதனுமாகிய யேசுக்கிறீஸ்துவின் மூலமாய்த் தாழ்ச்சியோடு பிரார்த்தித்து மன்ருடுகிறோம். தேவரீர் உமது ஊழியராகிய —— எனும் பாப்பானவரோடும் —— எனும் எங்கள் மேற்றிராணியாரோடும் சத்திய கத்தோலிக்க அப்போஸ்தொலிக்க விசுவாசத்தைக் கைக்கொள்ளுகிற சகலரோடும், உமது திருச்சபையை உலக முழுவதிலும் சமாதானத்திலிருத்தி, காத்து ஒற்றுமைப்படுத்தி ஆண்டருளும்.

## 29. சீவியருடைய ஞாபகம்

ஆண்டவரே தேவரீருக்கு அடிமை பூண்ட ஸ்திரீ பூமான்களாகிய —— யும் —— —— யும் சூழ நிற்கின்ற சகலரையும் நினைந்தருளும். இவர்களுடைய

* சாதாரண பாடற்பூசையில் 28-ம் இலக்கம் துவக்கி 34-ம் இலக்கம் மட்டும் முழந்தாள் இடுதல்.

விசுவாசம் தேவரீருக்கு அறியப்பட்டும் பத்தி தெரிந்துமிருக்கின்றதே. இவர்களுக்காக இந்த ஸ்தோத்திரப் பலியானது நம்மால் ஒப்புக்கொடுக்கப் படுகின்றது. இவர்களும் இதைத் தங்களுக்காகவும் தங்களைச் சேர்ந்தவர்களுக்காகவும், தங்கள் ஆத்தும மீட்புக்காகவும் ஈடேற்றமும் சுகமும் கிடைக்கும் நம் பிக்கையோடும் ஒப்புக்கொடுத்து, நித்தியரும் சீவிய ராகிய மெய்யான தேவனுமாகிய தேவரீருக்குத் தங் கள் நேர்த்திகளைச் செலுத்துகிறார்கள்.

## 30. அர்ச்சியசிஷ்டர்களின் ஞாபகம்

முதன்முதல் எங்கள் சருவேசுரனும் ஆண்ட வருமாகிய யேசுக்கிறீஸ்துவினுடையவும் மாதாவாகிய மகிமைதங்கிய நித்திய கன்னிமரியம்மாளோடும்; அவ ளுக்குப்பின், தேவரீருடைய முத்திப்பேறுபெற்ற அப்போஸ்தலர்களும் வேதசாட்சிகளுமாகிய இராயப் பர், சின்னப்பர், பெலேந்திரர், யாகப்பர், அருளப்பர், தோமையார், யாகப்பர், பிலிப்பப்பர், பாத்தலோமை யார், மத்தேசப்பர், சீமோனர், ததேயுவார், என்பவர் களோடும்; லீனுஸ், கிளேத்துஸ், சாந்தப்பர், சிக்ஸ் துஸ், கொணேலியுஸ், சிப்பிரியானுஸ், லவுறேஞ்சி யார், கிறிசோகொனுஸ், அருளப்பரும் சின்னப்பரும், கொஸ்மாவும் தமியானும் என்பவர்களோடும்; தேவ ரீருடைய சகல அர்ச்சியசிஷ்டர்களோடும் நாங்கள் ஐக்கியமாக, இவர்களது ஞாபகத்தைச் சங்கிக்கிறோம். இவர்களுடைய பெறு பேறுகளினாலும் மன்றாட்டங் களினாலும் நாங்கள் சகலத்திலும் தேவரீருடைய பாதுகாவலினுதவியை அடைந்துகொள்ளக் கிருபை செய்தருளும். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்துதாமே காரண காட்சியாக. ஆமென்.

## 31. ஆதலால் ஆண்டவரே

ஆதலால் ஆண்டவரே, எங்களுடையவும் தேவரீருடையவும் குடும்ப முழுதினுடையவும் அடிமைத்தனத்தின் காணிக்கையாகிய இதனைத் தேவரீர் உவப்போடு கையேற்று, எங்கள் நாட்களையும் தேவரீருடைய சமாதானத்திலே நிலைநிறுத்தி, எங்களை நித்திய கேட்டினின்று விலக்குவதோடு தேவரீருடைய தெரிந்துகொள்ளப்பட்டோரின் தொகையிலேயும் சேர்த்தருளவேண்டுமென்று மன்றாடுகிறோம். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து காரணகாட்சியாக. ஆமென்.

## 32. "இந்தக் காணிக்கையை"

இந்தக் காணிக்கையை, சருவேசுரா, தேவரீர் சகலத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டதும் முறைப்படியானதும் பலனுள்ளதும் புத்திக்கடுத்ததும் அங்கீகரிக்கப்படுவதுமாக்கி, எங்களுக்கு அது தேவரீருடைய சுதனும் எங்கள் ஆண்டவருமாகிய யேசுக்கிறீஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக வரச் செய்தருளவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

## 33. அப்பத்தை தேவ வசீகரமாக்குதல்

இவர் தாம் பாடுபடுவதற்கு முந்தின நாளன்று தமது பரிசுத்தமும் வணக்கத்துக்குரியவைகளுமான கரங்களில் அப்பத்தை எடுத்து, தமது சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவரீரை நோக்கி வானத்திற் கண்களை ஏறெடுத்து, தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து, அதை ஆசீர்வதித்துப் பிட்டுத் தமது சீஷர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றுவார்; எல்லாரும் வாங்கி இதிலே புசியுங்கள், ஏனெனில் இது என் சரீரம்.

## 34. பாத்திரத்தைத் தேவவசீகரமாக்குதல்

அப்படியே இராப்போசனத்தின்பின், இந்த உத்தமமான பாத்திரத்தையும் தமது பரிசுத்தமும் வணக்கத்துக்குரியவைகளுமான கரங்களில் எடுத்து, முன்போலவே தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செய்து ஆசீர்வதித்து தமது சீஷர்களுக்குக் கொடுத்துத் திருவுளம்பற்றுவார்; எல்லாரும் வாங்கி இதிலே பானம் பண்ணுங்கள்;

ஏனெனில் இது புதிதும் நித்தியமுமான ஏற்பாட்டினுக்குரிய என்னிரத்தத்தின் பாத்திரம். (விசுவாசத்தின் பரம இரகசியம்) இதுவே பாவமன்னிப்பின்பொருட்டு உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படப்போகிறது.

## † 35. "அதின் நிமித்தமாக"

அதின் நிமித்தமாக, ஆண்டவரே! தேவரீருடைய அடியார்களாகிய நாங்கள் உமது பரிசுத்தமான சனத்தினேடுங்கூட, தேவரீருடைய் சுதனும் எங்கள் ஆண்டவருமாகிய கிறீஸ்து என்னும் அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட மரணத்தையும், அவர் மரித்தோரிடையினின்று உயிர்த்தெழுந்ததையும், மேலும் அவர் பரமண்டலங்களில் மகிமையோடு ஆரோகணமாய்ப்போனதையும் நினைவுகூர்ந்துகொண்டு, தேவரீர் தந்த கொடைகளிலும் உபகாரங்களிலும் நின்றுதானே ஒரு தூய்மையான பலிப்பொருளை, பரிசுத்தமான பலிப்பொருளை, மாசற்ற பலிப்பொருளை, நித்தியசீவியத்தின் பரிசுத்தமான அப்பத்தை, சதாகால ஈடேற்றத்தின் பாத்திரத்தைத் தேவரீருடைய பிரதாபமுள்ள மகத்துவத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

---

† சாதாரண பாடற்பூசையில்மாத்திரம் எழுந்துநிற்றல்.

## 36. "இதின்பேரிலே தேவரீர்"

இதின்பேரிலே தேவரீர் உவப்போடும் கிருபையாயும் பார்த்து, முன்னாள் தேவரீருடைய ஊழியனாகிய ஆபேலெனும் நீதிமானின் காணிக்கைகளையும், எங்கள் அதிபிதாவாகிய ஆபிரகாமின் பலியையும், உமது மகா குருவாகிய மெல்க்கிசெதெக் தேவரீருக்கு ஒப்புக்கொடுத்த பரிசுத்த பலியையும், மாசற்ற பலிப்பொருளையும் ஏற்றுக்கொண்டதுபோல் இதனையும் ஏற்றுக்கொள்ளத் தயவுபுரியும்.

## 37. "தேவரீரைக் கெஞ்சி"

சருவத்துக்கும்வல்ல சருவேசுரா, நாங்கள் தேவரீரைக் கெஞ்சி மன்றாடுவதேதெனில், இவைகள் தேவரீருடைய திருச்சம்மனசானவர் கையாலே உமது தேவ மகத்துவத்தின் சமூகத்திலே உமது உன்னத பீடத்திற்குக் கொண்டுபோகப்படக் கட்டளையிட்டருளும். இப்படியே இந்தப் பீடத்திலே பங்குபற்றுவதினால் தேவரீருடைய சுதனின் அதி பரிசுத்த சரீரத்தையும் இரத்தத்தையும் உட்கொள்ளுகிறவர்களாகிய நாங்களெல்லாம், சகல பரலோக ஆசீர்வாதங்களாலும் வரப்பிரசாதத்தினாலும் நிரப்பப்படுவோமாக. எங்கள் கர்த்தராகிய கிறீஸ்துநாதமே காரணகாட்சியாக ஆமென்.

## 38. மரித்தோருடைய ஞாபகம்

மேலும் ஆண்டவரே! விசுவாசத்தின் அடையாளத்தோடு எங்களுக்கு முன் சென்றுவிட்டவர்களும் சமாதான நித்திரையாய்ச் சயனித்திருக்கின்றவர்களும் தேவரீருக்கு அடிமைபூண்ட ஸ்திரீ பூமான்களுமாகிய ——— யும் ——— யும் நினைந்தருளும்.

இவர்களுக்கும் கிறீஸ்துவிலிளைப்பாறுகின்ற சகலருக்கும், குளிர்ச்சியும் பிரகாசமும் சமாதானமுமுள்ள இடத்தைக் கட்டளையிட்டருளவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்துதாமே காரணகாட்சியாக. ஆமென்.

## 39. பாவிகளான எங்களின் ஞாபகம்

பாவிகளான எங்களுக்கும்—தேவரீருடைய இரக்கங்களின் பெருக்கத்திலே நம்பிக்கை வைத்திருக்கின்ற அடியார்களாகிய எங்களுக்கும், தேவரீருடைய திரு அப்போஸ்தலர்கள் வேதசாட்சிகளுடனும், அருளப்பர், முடியப்பர், மத்தியாசப்பர், பர்ணபாசப்பர், இஞ்ஞாசியார், அலெக்சாந்திரர், மர்செலினூர், இராயப்பர், பாக்கியம்மாள், பெர்பேத்துவம்மாள், ஆகத்தம்மாள், பிரகாசம்மாள், அஞ்ஞேசம்மாள், சிசிலியம்மாள், அனஸ்தாசியம்மாள் என்பவர்களுடனும், தேவரீருடைய சகல அர்ச்சியசிஷ்டர்களுடனும் ஓர் பங்கும் சகவாசமும் கட்டளையிடக் கிருபைசெய்யும். இவர்களுடைய கூட்டத்திலே எங்களையும் எங்கள் பெறு பேறுகளைப் பார்த்தல்ல, பிழைகளைப் பூரணமாய் மன்னித்துக்கொண்டு சேர்த்தருளவேண்டுமென்று மன்றாடுகிறோம். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து காரணகாட்சியாக. ஆமென்.

## 40. இயற்கையின் ஞாபகம்

அவர்மூலமாகவே, ஆண்டவரே இந்த நன்மைகளையெல்லாம் தேவரீர் எப்போதும் சிருட்டித்து, பரிசுத்தப்படுத்தி, உயிர்ப்பித்து, ஆசீர்வதித்து எங்களுக்குத் தந்தருளுகிறீர்.

## 41. முடிவுரை

அவர் தம்மூலமாயும், அவர் தம்மோடும், அவர் தம்மிலேயும், சருவத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவரீருக்கு, ஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்திலே எல்லாப் புகழ்ச்சியும் மகிமையும் உண்டாவதாக.

## 42. கர்த்தருடைய சேபம்

| | |
|---|---|
| குரு. Per omnia sæcula sæculorum. | முடிவில்லாத சதாகாலமுமாக. |
| பரி. Amen. | ஆமென். |

**பிரார்த்திக்கக்கடவோம் :**

ஈடேற்றத்துக்குரிய கட்டளைகளாற் போதிக்கப் பட்டும் தேவ ஏற்பாட்டினுல் ஏவப்பட்டும் நாங்கள் சொல்லத் துணிகிறதாவது :

பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே!

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.

உம்முடைய இராச்சியம் வருக.

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப் படுமாப்போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்.

எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப் போல, எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்.

| | |
|---|---|
| குரு. Et ne nos inducas in tentationem. | எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும். |
| பரி. Sed libera nos a malo. | தின்மையிலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். |
| குரு. Amen. | ஆமென். |

# V. அனுபவிப்புப் பகுதி

## 43. பிரிக்குதல்

ஆண்டவரே, சென்றுபோனவைகளும், நிகழ்கின்றவைகளும், வரப்போகின்றவைகளுமான சகல தீமைகளிலேயும் நின்று தேவரீர் எங்களை இரட்சித்து, முத்திப்பேறு பெற்றவளும் மகிமையுள்ள நித்திய கன்னிகையுமான தேவதாய் மரியம்மாளுடையவும், இராயப்பர் சின்னப்பரும் பெலேந்திரரும் என்னும் முத்திப்பேறுபெற்ற அப்போஸ்தலர்களுடையவும் சகல அர்ச்சியசிஷ்டர்களுடையவும் வேண்டுதலை முன்னிட்டு எங்கள் நாட்களில் சமாதானத்தைத் தயவாய்த் தந்தருளி நாங்கள் தேவரீருடைய இரக்கத்தினுதவியினால் துணைச்செய்யப்பட்டவர்களும் பாவத்தில் நின்று எப்போதும் நீங்கினவர்களும் எவ்வித நெருக்கிடைகளுக்கும் உள்ளாகாதவர்களுமாய் இருக்கச்செய்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீருடைய சுதனாகிய எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துநாமே காரண காட்சியாக. இவரே தேவரீரோடு இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தில் சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவர்

## † 44. கலக்குதல்

| | |
|---|---|
| குரு. Per omnia sæcula sæculorum. | முடிவில்லாத சதாகாலமுமாக. |
| பரி. Amen. | ஆமென். |
| குரு. Pax Domini sit semper vobiscum. | கர்த்தருடைய சமாதானம் உங்களுடனே என்றென்றும் இருப்பதாக. |
| பரி. Et cum Spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |

† எல்லாப் பாடற்பூசையிலும் எழுந்து நிற்றல்.

எங்கள் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவின் சரீரத்தினும் இரத்தத்தினும் இந்தக் கலப்பும் அர்ச்சிப்பும் இதைப் பெற்றுக்கொள்ளுகிற எங்களுக்கு நித்திய சீவியத்துக்கு வழியாவதாக. ஆமென்.

## 45. பிழைதட்டுதல்

[சாதாரணப் பூசையில் :]

| | |
|---|---|
| 1. Agnus Dei, qui tollis peccata mundi: miserere nobis. | லோக பாவங்களைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையே: எங்கள்பேரில் இரக்கமாயிரும். |
| 2. Agnus Dei, qui tollis peccate mundi: miserere nobis. | லோக பாவங்களைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையே: எங்கள்பேரில் இரக்கமாயிரும். |
| 3. Agnus Dei, qui tollis peccata mundi: dona nobis pacem. | லோக பாவங்களைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையே: எங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளும். |

[மரித்தோர் பூசையில்]

| | |
|---|---|
| 1. Agnus Dei, qui... dona eis requiem. | லோக பாவங்களைப்........... அவர்களுக்கு இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். |
| 2. Agnus Dei, qui... dona eis requiem. | லோக பாவங்களைப்........... அவர்களுக்கு இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். |
| 3. Agnus Dei, qui... dona eis requiem sempiternam. | லோக பாவங்களைப்........... அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். |

## 46. சமாதானச் சேபம்

[இது மரித்தோர் பூசையில் சொல்லப்படுவதில்லை]

ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவே, தேவரீர் உமது அப்போஸ்தலர்களைப் பார்த்து: சமாதானத்தை உங்களுக்கு விட்டுவிடுகிறேன், எனது சமாதானத்தை

உங்களுக்குத் தருகிறேன் என்று வசனித்தீரே! தேவரீர் என் பாவங்களைப் பாராமல் தேவரீருடைய திருச்சபையின் விசுவாசத்தையே பார்த்து, அத் திருச்சபையைத் தேவரீருடைய சித்தத்தின்படி சமாதானத்திலிருத்தி ஒற்றுமைப்படுத்தத் தயைகூர்ந் தருளும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சருவேசுரனே. ஆமென்.

## 47. அனுபவிப்புக்கு ஆயத்தம்

ஆண்டவராயிருக்கிற யேசுக்கிறீஸ்துவே, சீவியராகிய தேவனின் குமாரனே! | தேவரீர் பிதாவுடைய சித்தத்தினலும் இஸ்பிரீத்துசாந்துவின் உடன்முயற்சியோடும் உமது மரணத்தின் மூலமாய் உலகத்துக்கு உயிர் கொடுத்தருளினீரே! | இந்த உமது அதிபரிசுத்த சரீரத்தினலும் இரத்தத்தினலும் தேவரீர் அடியேனை எனது அக்கிரமங்கள் யாவற்றினின்றும் சகல தீமைகளினின்றும் விடுதலையாக்கும். | உமது கற்பனைகளில் எப்போதும் பற்றுள்ளவனகச் செய்யும். | நான் உம்மிடத்தினின்று ஒருபோதும் பிரிந்துபோகவொட்டாமற் காத்துக்கொள்ளும். | பிதாவாகிய அவரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலமும் சீவியராய் இராச்சிய பரிபாலனம்பண்ணுகிற சருவேசுரனே | ஆமென்.

ஆண்டவராயிருக்கிற யேசுக்கிறீஸ்துவே! | அபாத்திரனகிய நான் உட்கொள்ளத் துணிகிற தேவரீருடைய சரீரத்தின் பங்கு பற்றுதலானது, எனது தீர்வைக்கும் தண்டனைக்கும் காரணமாகாமல் இருக்கக்கடவது. | தேவரீருடைய தயவினலே என்னுத்துமத்துக்கும் சரீரத்துக்கும் பாதுகாவலும் என் பிணி

களுக்கு மருந்துமாக வரக்கடவது. | பிதாவாகிய சருவேசுரனோடு இஸ்பிரீத்துச்சாந்துவின் ஐக்கியத்தில் சதாகாலமும் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற சருவேசுரனே. | ஆமென்.

## 48. சற்பிரசாதத்தை கையில் ஏந்துதல்

பரலோக அப்பத்தைக் கையிலெடுத்து ஆண்டவருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன்.

## 49. தாழ்த்துதல்

ஆண்டவரே, தேவரீர் என் கூரையின்கீழ் எழுந்தருள அடியேன் பாத்திரவானல்ல, ஆனாலும், ஒரு வார்த்தை மாத்திரம் திருவுளம்பற்றும் என்னாத்துமம் குணப்பட்டுவிடும். (மூன்று முறை)

## 50. சற்பிரசாதம் அனுபவித்தல்

எங்களாண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் சரீரம் என்னாத்துமத்தை நித்திய சீவியத்துக்குக் காப்பாற்றுவதாக. ஆமென்.

## 51. பாத்திரத்தை கையில் எடுத்தல்

ஆண்டவர் எனக்கு அளித்த சகலத்துக்குங் கைமாறாக நான் அவருக்கு என்னத்தை ஒப்புக்கொடுப்பேன்? இரட்சணியப் பாத்திரத்தைக் கையிலெடுத்து ஆண்டவருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். தோத்திரம் செய்துகொண்டு ஆண்டவரைக் கூப்பிட்டு என் சகல சத்துருக்களிடத்திலும் நின்று மீட்கப்படுவேன்.

## 52. பாத்திரத்தை அனுபவித்தல்

எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் இரத்தம் என் ஆத்துமத்தை நித்திய சீவியத்துக்குக் காப்பாற்றுவதாக. ஆமென்.

## 53. சற்பிரசாதங் கொடுத்தல்

| | |
|---|---|
| பரி. Confiteor Deo omnipotenti... | சருவத்துக்கும் வல்ல சருவேசுரனுடனேயும்...... |
| குரு. Misereatur vestri......ad vitam æternam. | சருவத்துக்கும் வல்ல சருவேசுரன் உங்கள்மேல் இரக்கங் கொண்டு......செய்வாராக. |
| பரி. Amen. | ஆமெண். |
| குரு. Indulgentiam ... misericors Dominus. | சருவத்துக்கும் வல்ல தயாபரராண சருவேசுரன் உங்கள் பாவங்களுக்கு ... ... கட்டளையிட்டருளுவாராக. |
| பரி. Amen. | ஆமென். |

இதோ! தேவ செம்மறிப்புருவையே. இதோ! லோக பாவங்களைப் போக்குகிறவரே.

ஆண்டவரே, தேவரீர் என் கூரையின்கீழ்......
(மூன்று முறை)

எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவின் சரீரம் உன் ஆத்துமத்தை நித்திய சீவியத்துக்குக் காப்பாற்றுவதாக. ஆமென்.

## ‡ 54. பாத்திரத்தில் இரசம் வாங்குதல்

ஆண்டவரே, நாங்கள் வாயினுல் உட்கொண்டதைச் சுத்தமான இருதயத்தினுலேயும் பெற்றுக் கொண்டவர்களாகக்கடவோம். | மேலும், இம்மையிலே அடைந்துகொண்ட இந்தக் கொடையானது எங்களுக்குச் சதாகால அவுஷதமாகக்கடவது.

## 55. சுத்திகரஞ் செய்தல்

ஆண்டவரே, அடியேன் உட்கொண்ட தேவரீருடைய சரீரமும் பானம்பண்ணிய இரத்தமும் எனது உள்ளுறுப்புக்களிலே சேர்ந்துகொள்ளக்கடவன. | தூய்மையும் பரிசுத்தமுமான இத்தேவதிரவிய அனுமானத்தினல் திருத்தியடைந்த என்னிடத்திலே பாவத்தின் மாசுகள் நிலைகொள்ளாதபடி அனுக்கிரகஞ் செய்தருளும். | சதாகாலமும் சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவரே. | ஆமென்.

## 56. அனுபவிப்பு வாக்கியம்

[இது நாளுக்கு நாள் வேறுபடும்]

நித்திய பிதாவின் திருக்குமாரனைச் சுமந்த கன்னி மரியாயின் உதரம் பாக்கியம் பெற்றது.

## † 57. அனுபவித்தபின் சேபம் *

[இது நாளுக்கு நாள் வேறுபடும்]

| | | |
|---|---|---|
| குரு. | Dominus vobiscum. | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. | Et cum spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |

### பிரார்த்திக்கக்கடவோம்

ஆண்டவரே, எங்கள் இரட்சணியத்துக்கு உதவியான இதிலே பங்குபற்றிய நாங்கள் இந்தக் காணிக்கைகளை யாருடைய மகிமையைக்குறித்து உமது தேவ மகத்துவத்துக்கு ஒப்புக்கொடுத்தோமோ அந்த முத்திப்பேறுபெற்ற நித்திய கன்னியான மரியம்மாளின் சலுகையினல் எப்போதும் எவ்விடத்திலும் பாதுகாக்கப்பட்டிருக்கத் தயவுபண்ண வேணுமென்று தேவரீரைக் கெஞ்சி மன்ருடுகிறேரும். தேவரீரோடு இஸ்பி

ரீத்துசாந்துவின் ஐக்கியத்தில் சதாகாலம் சீவியராய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற தேவரீருடைய சுதனுகிய எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக.

பரி. Amen. ஆமென்.

## 58. ஆசீர்வாதம்

குரு. Dominus vobiscum. கர்த்தர் உங்களுடனே.

பரி. Et cum spiritu tuo. உமது ஆத்துமத்துடனேயும்.

[சாதாரண பூசையில்]

குரு. Ite, missa est. போய் வாருங்கள் பூசை முடிந்தது.

பரி. Deo gratias. சருவேசுரனுக்குத் தோத்திரம்.

[சம்மனசுகளின் கானம் சொல்லப்படாத பூசையில்]

குரு. Benedicamus Domino. ஆண்டவரைத் துதிக்கக்கடவோம்.

பரி. Deo gratias. சருவேசுரனுக்குத் தோத்திரம்.

[மரித்தோர் பூசையில்]

குரு. Requiescant in pace. சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

பரி. Amen. ஆமென்.

** பரிசுத்த திரித்துவமே, என்னடிமைத்தனத்தின் பணிவிடையானது தேவரீருக்கு உவப்பாயிருக்கக்கடவது. அபாத்திரனுகிய அடியேன் தேவரீருடைய மகத்துவத்தின் சமுகத்திலே ஒப்புக்கொடுத்த பலியானது தேவரீரால் அங்கீகரிக்கப்பட்டு, தேவரீ

---

** எல்லாப் பூசையிலும் முழந்தாள் இடுதல்.

ருடைய இரக்கத்தினலே என்னுடையவும் அதை நான் எவருக்காக ஒப்புக்கொடுத்தேனே அவர்கள் சகலருடையவும் பாவப்பிராயச்சித்தத்துக்குரியதாகும் படி கிருபை செய்தருளும். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்து காரண காட்சியாக. ஆமென்.

[மரித்தோர் பூசையில் ஆசீர்வாதம் இல்லை:]

பிதாவும் சுதனும் இஸ்பிரீத்துச்சாந்துவுமாகிய சருவத்துக்கும் வல்ல சருவேசுரன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

பரி. Amen. — ஆமென்.

## †† 59. கடைசிச் சுவிசேஷம்

[இரண்டாவதாய்க் கொண்டாடப்படும் திருநாளுக்கு விசேஷ சுவிசேஷம் இருந்தால் அது இதற்குப் பதிலாக வாசிக்கப்படும்.]

| | |
|---|---|
| குரு. Dominus vobiscum. | கர்த்தர் உங்களுடனே. |
| பரி. Et cum spiritu tuo. | உமது ஆத்துமத்துடனேயும். |
| குரு. Initium sancti Evangelii secundum Joannem. | அருளப்பர் எழுதிய பரிசுத்த சுவிசேஷத்தின் ஆரம்பம். |
| பரி. Gloria tibi, Domine. | ஆண்டவரே, உமக்கு மகிமை உண்டாவதாக. |

ஆதியிலே வார்த்தையானவர் இருந்தார். அந்த வார்த்தையானவர் சருவேசுரனிடத்தில் இருந்தார். அந்த வார்த்தையானவர் சருவேசுரனுகவும் இருந்தார். அவர் ஆதியிலே சருவேசுரனிடத்தில் இருந்தார். அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாக்கப்பட்டதொழிய

†† எல்லாப் பூசையிலும் எழுந்து நிற்றல்.

உண்டாக்கப்பட்டவைகளில் எதுவும் அவராலேயன்றி உண்டாக்கப்படவில்லை. அவருக்குள் சீவனிருந்தது. அந்தச் சீவன் மனிதருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளில் பிரகாசிக்கின்றது. ஆயினும் இருளானது அதை ஒப்புக்கொள்ளவில்லை.

சருவேசுரனாலே அனுப்பப்பட்ட ஒரு மனிதன் இருந்தார். அவருக்கு அருளப்பர் என்று பேர். அவர் தமது வழியாய்ச் சகலரும் விசுவசிக்கும் பொருட்டு, ஒளியைக்குறித்துச் சாட்சியஞ் சொல்லுவதற்குச் சாட்சியாக வந்தார். அவர் அந்த ஒளியல்ல. ஆனால் அந்த ஒளியைக்குறித்துச் சாட்சியஞ் சொல்ல வந்தவராமே.

வார்த்தையாகிய அவர் இவ்வுலகத்திலே வருகிற எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாயிருந்தார். அவர் உலகத்திலிருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாக்கப்பட்டது. ஆகிலும் உலகம் அவரை அறிந்துகொள்ளவில்லை. அவர் தமது ஆதீனத்தில் வந்தார். அவருடையவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. யார்யார் அவரை ஏற்றுக்கொண்டு, அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களானார்களோ, அவர்கள் தேவபுத்திரர் ஆகும்படி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலுமல்ல, மாமிச இச்சையினாலுமல்ல, மனுஷனுடைய சித்தத்தினாலுமல்ல, ஆனால் சர்வேசுரனாலே பிறந்தவர்கள். ** **வார்த்தையானவர் மாமிசமாகி,** †† இஷ்டப்பிரசாதமும் சத்தியமும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசமாயிருந்தார். அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவின் ஏக சுதனுக்குரிய மகிமைக்கு நிகராயிருந்தது.

பரி. Deo gratias. சருவேசுரனுக்குத் தோத்திரம்.

## 60. திருச்சபைக்காகச் சேபங்கள்

[இவை சாதாரண வாசகப்பூசையில் மாத்திரம் சொல்லப்படும்]

பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே வாழ்க... (மூன்று முறை)

கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே, வாழ்க!

எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமே, வாழ்க!

பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள் உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம்.

இந்தக் கண்ணீர்க் கணவாயிலிருந்து பிரலாபித்து அழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்.

ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே!

உம்முடைய தயாபரமுள்ள திருவிரக்கக் கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும்.

இதுவன்றியே நாங்கள் இந்தப் பரதேசம் கடந்த பிற்பாடு உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசுவின் பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும்.

கிரிபாகரியே, தயாபரியே, பேரின்ப ரசமுள்ள கன்னி மாமரியே!

குரு. Ora pro nobis Sancta Dei Genitrix.

சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சனங்கள். Ut digni efficiamur promissionibus Christi.

கிறீஸ்துவினுடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கப் பண்ணும்.

**பிரார்த்திக்கக்கடவோம்**

எங்கள் அடைக்கலமும் பெலனுமாயிருக்கிற சருவேசுரா சுவாமி, உம்மை நோக்கி அபயமிடுகிற உமது சனங்களைக் கிருபையாகப் பார்த்தருளும். மகிமையுடையவளும், மாசில்லாதவளுமாகிய தேவ கன்னித்தாயாரான மரியம்மாளும் அவளுடைய பத்தாவாகிய அர்ச். சூசையப்பரும் உமது பரிசுத்த அப்போஸ்தலரான பேதுரு பாவுலுவும் மற்றுஞ் சகல மோட்சவாசிகளுஞ் செய்யும் வேண்டுதலை முன்னிட்டு பாவிகள் மனந்திரும்புதலுக்காகவும், எங்கள் பரிசுத்த மாதாவாகிய திருச்சபை விடுதலைபெற்று மகிமையடைகிறதற்காகவும், நாங்கள் ஒப்புக்கொடுக்குஞ் செபங்களைக் கிருபை தயாளத்துடன் கேட்டருளும். எங்கள் கர்த்தராகிய கிறீஸ்துநாமே காரண காட்சியாக. ச.—ஆமென்.

அதிதூதரான அர்ச். மிக்கேலே! யுத்தநாளில் எங்களைத் தற்காரும். பிசாசின் துஷ்டத்தனத்திலும் அதின் கண்ணிகளிலும் நின்று எங்களைக் காத்துக்கொள்ளும். சருவேசுரன் அதைக் கடிந்துகொள்ளும்படி தாழ்மையுடன் மன்றாடுகிறோம். வானுலக சேனைக்கு அதிபதியாயிருக்கிற நீரும் ஆத்துமாக்களை நாசஞ்செய்யும்படி உலகமெங்குஞ் சுற்றித்திரியும் சாத்தானையும் மற்றும் பிசாசுகளையும் தேவ வல்லமையைக்கொண்டு நரக பாதாளத்திலே தள்ளிவிடும்.

ச.—ஆமென்.

[பின்வரும் செபம் மூன்று முறை சொல்லவும்.]

கு.—யேசுவின் அதிதிரு இருதயமே!

ச.—எங்கள்பேரில் இரக்கமாயிரும்.

# பூசைக்குப்பின் சொல்லத்தக்க

# ஸ்தோத்திரச் செபம்

1. கர்த்தரின் படைப்புகள் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
என்றும் அவரைத் துதியுங்கள்,
என்றும் அவரை ஏத்துங்கள்.

2. கர்த்தரின் தூதுவ கணங்களே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
வானிடை விரிவுறு தலங்களே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

3. வான்மேல் விரிநீர் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
கர்த்தரின் சத்துவங்கள் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

4. சூரிய சந்திர கோளங்களே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
வானிடை நிரையுறு தாரைகளே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

5. மழையும் மழையுடன் பனியுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
கடவுளின் மாருதம் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

6. நெருப்பும் நெருப்பின் அனலுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
குளிரும் குளிருடன் கானலுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

7. பனித்துளியும் வெண்பனித் திரளுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
உறைபனியும், உறைபனிக் குளிருமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

8. உறைநீரும் உறைபனிப் படையுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
அல்லும் பகலும் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

9. வெளிச்சமும் அத்துடன் இருட்டுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
மின்னல் மினுமினுப்பும் முகில்களுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

10. பூவுலக மானது தானுமே
கர்த்தரைப் புகழ்ந்து போற்றட்டும்.
என்றும் அவரைத் துதிக்கட்டும்
என்றும் அவரை ஏத்தட்டும்.

11. மலைகளும் மலைகளொடு குன்றுகளுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
தரைமேல் விளைபயிர் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

12. தண்ணீர் சுரக்கும் ஊற்றுகளே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
கடல்களும் கடல்களுடன் நதிகளுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

13. திமிலமும் புனல்வாழ் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
வானுயர் பறவைகள் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

14. காட்டுமிருகம் நாட்டுமிருகம் அனைத்துமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
மானிட பிறவி மாக்களே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

15. இஸ்ருயேல் தேவ பிரசைகளுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றட்டும்
என்றும் அவரைத் துதிக்கட்டும்,
என்றும் அவரை ஏத்தட்டும்.

16. கர்த்தரின் குருக்கள் குழாங்களே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
கர்த்தரின் தொண்டு செய்வோரே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

17. நீதிமான்கள் மனசும் ஆத்துமமுமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.
சுத்தவாளரும் மனத்தாழ்மை உள்ளோருமே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்.

18. அனனியா அசாரியா மிசாயேலே,
கர்த்தரைப் புகழ்ந்து போற்றுங்கள்,
என்றும் அவரைத் துதியுங்கள்,
என்றும் அவரை ஏத்துங்கள்.

19. பிதாச்சுதன் இஸ்பிரீத்து சாந்துவையுமே,
புகழ்ந்து போற்றுவோம் நாங்களுமே,
என்றும் அவரைத் துதித்திடுவோம்
என்றும் அவரை ஏத்திடுவோம்.

20. ஆகாய விரிவிற் கர்த்தரே,
புகழ்ந்துபோற்றப் படுபவர் நீர்,
துதிக்கப்படப் பாத்திரரும் நீர்,
என்றுமேத்தலும் மகிமையும் பெறுவீரே.



# பரிபூரண பலனுள்ள செபம்

மெய்யான மனஸ்தாபப்பட்டுப் பாவசங்கீர்த்தனம்பண்ணித் தேவ நற்கருணை வாங்கினபின் யேசுநாதர்சுவாமி பாடுபட்ட சுரூபத்துக்கு அல்லது படத்துக்கு முன்பாக முளந்தாளிலிருந்து பின்வரும் செபத்தைச் செபிப்பவர்களுக்கு பரி. பாப்பானவர் பரிபூரண பலனைக் கட்டளையிட்டருளினார்.

இப்பரிபூரணபலனை உத்தரிப்புஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களுக்குச் செலுத்தலாகும்.)

மகா மதுரம்பொருந்திய நல்ல யேசுவே! | அடியேன் தேவரீருடைய சமுகத்தில் | முழந்தாளிலிருந்து சாஷ்டாங்கமாக விழுந்து | "என் கைகளையும் என் கால்களையும் துளைத்தார்கள், | என் எலும்பெல்லாம் எண்ணினார்கள்" என்று | தேவரீரைப் பற்றி | முன்னர் தாவீது என்கிற தீர்க்கதரிசி | உமது திரு வாயின் வாக்கியமாக வசனித்ததை | என் கண் முன்பாகக் கண்டு, | தேவரீருடைய ஐந்து திருக்காயங்களையும் | மிகுந்த மனவுருக்கத்தோடும் துக்கத்தோடும் | என் உள்ளத்தில் விசாரித்து | நினைவில் தியா

ணிக்கிற இந்நேரத்தில் | திடனான விசுவாசம், நம்பிக்கை, தேவ சிநேகம் என்கிற | சுகிர்த கருத்துகளையும் | என் அக்கிரமங்களின்மேல் மெய்யான மனஸ்தாபத்தையும் | அதுகளைத் திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் | என் இருதயத்தில் பதியச் செய்தருளவேணுமென்று | என் நல்ல யேசுவே! தேவரீரை | என் ஆத்துமத்தின் மேலான ஆசை ஆவலோடு | இரந்து மன்றாடிப் பிரார்த்திக்கிறேன் சுவாமீ | ஆமென்யேசு.

(பாப்பானவரின் கருத்துக்காக ஒரு பர. பிரி. திரி. சொல்லவும்.)



# பூசைக்கு ஏதுவானவை

## கோயில்

1. கோயில் (=திருச்சபை)—திவ்விய பூசைப் பலி செலுத்தப்படுந் தேவாலயம்.

2. கோபுரம் (=உன்னத தேவனுக்குத் தோத்திரம் பாடுஞ் சம்மனசு)—கோயில் முகப்புக்குமேல் அல்லது சந்நிதானத்துக்குமேல் இருக்கும் உயர்ந்த கட்டிடம்.

3. மணிகள் (=தீர்க்கதரிசிகள்)—பூசைக்குச் சனங்களை அழைக்கத் தொனியிடும் ஆயுதங்கள்.

4. சந்நிதானம் (=மோட்சம்)—குருமார் தேவாராதனை செலுத்தும் பரிசுத்தமான இடம். இதைச் சுற்றி அனுபவிப்பு மேசை நிறுத்தப்பட்டிருக்கும்.

5. மூலைக்கல் (=யேசுநாதர்)—கோயில் கட்டும்பொழுது சந்நிதானத்தின் மூலையில் நிறுத்தப்பட்ட அஸ்திவாரக்கல்.

6. நாலு மூலைகள் (=சுவிசேஷகர்)—சந்நிதானத்தின் நாலு மூலைகளில் இருக்குந் தூண்கள் அல்லது சுவர்கள்.

7. நேவ் (=இரட்சணியத்தின் பேழையான விசுவாசிகளின் சபை)—சனங்கள் இருந்து பூசை காணுமிடம். பிரசங்கக்கூடும் கொம்பிசத்தட்டியும் இவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும்.

8. **பன்னிரண்டு தூண்கள் (=அப்போஸ் தலர்)**—நேவின் இரு பக்கத்தில் இருக்குந் தூண்கள் அல்லது சுவரின் பிரதானமான பகுதிகள்.

9. **கோயிற் கதவுகள் (=திருச்சபையைத் தற்காக்கும் வேதபாரகர்)**—கோயில் வாசலை மூடுங் கதவுகள்.

10. **சக்கிறிஸ்தி (=உத்தரிக்கிற ஸ்தலம்)**—குருமார் சுத்தி செய்து பூசை வஸ்திரங்கள் தரிக்கு மிடம்.

11. **நார்தேக்ஸ் (திருச்சபையின் போதனை யைக் கேட்கும் பல சாதி சனங்கள்)**—ஞானஸ்நானங் கொடுக்குமிடம். ஞானஸ்நானத் தொட்டி இவ்விடத் தில் நிறுத்தப்பட்டிருக்கும்.

## பீடம்

1. **பீடம் (=கல்வாரிமலை)**—பூசைப்பலி செலுத்தப்படும் மேசை.

2. **அடுத்தாற்கல் (=ஐந்து காயமுள்ள யேசு வின் திருச்சரீரம்)**—பீடத்தின் மேற் பகுதியான மேற்றிராணியாரால் அபிஷேகிக்கப்பட்ட ஐந்து குருசு கள் உள்ள கல்.

3. **சுத்தமான வஸ்துவின் குழி (=யேசுவை அடக்கம்பண்ணப்பட்ட கல்லறை)**—அடுத்தாற்கல் நடுவில் இருக்கும் அர்ச்சியசிஷ்டர்களின் எலும்புகள் வைத்து மூடப்பட்ட குழி.

4. **அடுத்தாற் சீலைகள் (=யேசுவின் திருச் சரீரத்தை மூடிய பரிவட்டம்)**—பீடத்தின்மேல் விரித் திருக்கும் மூன்று வெள்ளைச் சீலைகள்.

5. **சற்பிரசாதக்கூடு** (=பரம திரித்துவத்தின் ஆசனம்)—பிக்சுக்குள் அல்லது சிபோறியத்துக்குள் இருக்கும் சற்பிரசாதத்தை வைத்திருக்கும் பீடத்தின் நடுவிலிருக்கும் பெட்டி.

6. **பாடுபட்ட சுரூபம்** (=யேசுவின் சிலுவைப் பலி)—சிலுவையில் அறையுண்ட யேசுவின் திருச் சுரூபம்.

7. **மெழுகுதிரி** (=மாசில்லாமலுற்பவித்த மரியம்மாளின் உதரத்தில் மனுஷனாய் உற்பவித்த ஞான வெளிச்சமாகிய தேவ சுதன்)—தேனீக்களின் மெழுகினாற் செய்யப்பட்ட வத்தி.

8. **சற்பிரசாத விளக்கு** (=திருச்சபையின் இருதயத்தில் எரியும் தேவ சிநேகம்)—தேவ நற்கருணை இருக்கும் பீடத்துக்குமுன் இரவும் பகலும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு.

9. **மிசல்** (=தேவ அறிவிப்பு)—பூசைச் செபங்களும் சடங்குகளும் அடங்கியிருக்கிற புத்தகம்.

## பாத்திரங்கள்

1. **பூசைப் பாத்திரம்**—பூசை நேரத்தில் இரசம் தேவ வசீகரமாக்குகிறதற்குப் பாவிக்கப்படும் பாத்திரம்.

2. **பற்றேன்**—தேவ வசீகரமான அப்பம் வைக்கப்படும் தட்டைப் பாத்திரம்.

3. **பாத்திரத் துவாலே**—குரு சற்பிரசாதம் உட்கொண்டபின் தமது உதடுகளேயும், விரல்களேயும், பாத்திரத்தையும் துடைக்க உபயோகிக்கும் சீலைத் துண்டு.

4. **போல்**—திரு இரத்தமிருக்கும் பாத்திரத்தில் பிறத்திப் பொருட்கள் விழாதபடி மூடிவைக்க உபயோகிக்கப்படுகிற வெள்ளைத் துணி தைத்த தட்டு.

5. **வேயில்**—பூசைப் பாத்திரங்களை அப்பத்தைக் காணிக்கையாக்குதலுக்கு முதலும் சற்பிரசாத அனுபவிப்புக்குப் பின்னும் மூடுகிற பட்டு. இப் பாத்திர வெயிலைத் தவிர சிபோறிய வெயிலும் சற்பிரசாதக் கூட்டு வெயிலும் ஆகிய வேறு இரண்டு வெயில்களும் உண்டு.

6. **கோர்ப்போறல்**—பீடத்தின்மேல் பாத்திரமும் ஓஸ்தி அப்பமும் வைக்கப்படும் வஸ்திரம். சற்பிரசாதமிருக்குங் கதிர்ப் பாத்திரமும், பிக்சும், சிபோறியமும் இதன்மேற்றான் வைக்கவேண்டும்.

7. **பேர்ஸ்**—கோர்ப்போறல் மடித்து வைக்கப்படும் பை.

8. **குப்பிகள்**—இரசமும் தண்ணீரும் வைக்கப்படும் இரண்டு பாத்திரங்கள்.

9. **கைதுவாலை**—குரு கைவிரல் கழுவித் துடைக்கும் வெள்ளைச் சீலைத் துண்டு.

10. **கதிர்ப் பாத்திரம்**—ஆசீர்வாதங் கொடுக்கிறதற்காக அல்லது ஆராதனை செலுத்துகிறதற்காக சற்பிரசாதம் எழுந்தேற்றம் பண்ணி இருக்கும் பாத்திரம்.

11. **பிக்ஸ்**—கதிர்ப்பாத்திரத்துக்குள் எழுந்தேற்றம் பண்ணப்படுகிற சற்பிரசாதம் அல்லது அவஸ்தைக்குக் கொண்டுபோகிற சற்பிரசாதம் வைக்கப்படும் கூடு.

12. **லுணூலா**—கதிர்ப்பாத்திரத்துக்குள் எழுந்தேற்றம் பண்ணப்படுகிற சற்பிரசாதத்தின் பிடி.

13. **சிபோறியம்**—சனங்கள் அனுபவிக்கப் போகிற சற்பிரசாதம் வைக்கப்படும் மூடியுள்ள பாத்திரம்.

14. **அனுபவிப்புத் தட்டு**—சனங்கள் சற்பிரசாதம் அனுபவிக்கும்பொழுது நாடிக்குக்கீழ் பிடிக்கப் படுந் தட்டு.

15. **அனுபவிப்புச் சீலை**—அனுபவிப்பு மேசைக்குமேல் விரிக்கப்பட்டிருக்கும் வெள்ளைச் சீலை.

## வஸ்திரங்கள்

1. **அமித்** (=யேசுநாதரின் திருக்கண்களை மூடின துகில்; குரு சோதனையை அகற்றல்)—குரு முதலில் தமது தலையை மூடி, பின்பு முதுகில் போர்த்துக்கொள்ளுகிற வெள்ளை வஸ்திரத் துண்டு.

2. **அல்ப்** (=யேசுநாதருக்கு ஏரோது இராசா அணிவித்த வெள்ளை அங்கி; குருவின் இருதய சுத்தம்)—குரு அணியும் நீண்ட வெள்ளை அங்கி.

3. **கேடிள்** (=யேசுநாதரைக் கற்றூணில் கட்டின கயிறு; குருவின் கற்பு)—குரு அரையில் கட்டும் வெள்ளைக் கயிறு.

4. **மனிப்பிள்** (=யேசுநாதரின் திருக்கரங்களைக் கட்டின சங்கிலி; குருவின் தபசு)—குரு இடது கையில் அணியும் பட்டு வஸ்திரம்.

5. **ஸ்தோல்** (=யேசுநாதரைக் கழுத்தில் கட்டி இழுத்த கயிறு; குருவின் இஷ்டப்பிரசாத நிலமை)—குரு கழுத்தில் போட்டு எதிரில் தொங்கவிடும் நீண்ட பட்டு வஸ்திரம்.

6. **சசுபிள்** (=யேசுநாதர் சுமந்த சிலுவை; குருவின் பாரமான கடமை)—குருவின் தோள்களை

யும் முன்னேயும் பின்னேயும் மூடுகிற சிலுவையடையாளமுள்ள பட்டு வஸ்திரம்.

7. பிறேத்தா (=யேசுநாதரின் முள்முடி; குருவின் தாழ்மை)—குரு அணியும் தொப்பி.

8. நனிக் (=யேசுநாதர் தூய இருதயமுள்ளவர்களின் முன்மாதிரிகை; சப்டீக்கனின் விரத்தம்)—சப்டீக்கனின் தோள்களேயும் முன்னேயும் பின்னேயும் மூடுகிற பட்டு வஸ்திரம்.

9. டல்மற்றிக் (=யேசுநாதர் தரித்திரர்களின் போதகர்; டீக்கனின் தரித்திரம்)—டீக்கனின் தோள்களேயும் முன்னேயும் பின்னேயும் மூடுகிற பட்டு வஸ்திரம்.

10. கோப் (=யேசுநாதர் ஆத்துமங்களின் ஆதரவு; குருவின் தேவ ஆவல்)—குரு பூசையைத்தவிர மற்ற ஆராதனேகளுக்கு அணியும் பட்டுப் போர்வை வஸ்திரம்.

11. குமறல் வேயில் (=யேசுநாதர் இம்மானுவேல்; குருவின் தேவ நம்பிக்கை)—குரு சற்பிரசாதத்தால் ஆசீர்வதிக்கும்போது அல்லது சற்பிரசாதம் கொண்டுபோகும்போது தோளில் அணியும் பட்டுச் சால்வை.

12. மயிற்றர் (=யேசுநாதரின் உடன்படிக்கை; மேற்றிராணியாரின் நிதானம்)—மேற்றிராணியார் அணியுந் தொப்பி.

13. செங்கோல் (=யேசுநாதர் நல்லாயன்; மேற்றிராணியாரின் மேய்ப்பு)—மேற்றிராணியார் கையில் பிடிக்கும் செங்கோல்.

14. ரையிறு (=யேசுநாதர் தீர்க்கதரிசி, குரு, இராசா; பாப்பானவரின் போதிக்கும், மன்னிக்கும், அரசாளும் தத்துவங்கள்)—*பாப்பானவர் அணியும் தொப்பி.*

## *நிறம்*

1. வெள்ளை (=தேவ மகிமையின் வெளிச்சம்; அர்ச்சியசிஷ்டர்களின் பரிசுத்ததனம்)—*திரித்துவத்தின், யேசுகிறீஸ்துநாதரின், தேவமாதாவின், ஸ்துதியர்களின், கன்னியர்களின் திருநாட்களில் பாவிக்கப்படும்.*

*இது பாப்பானவருடைய நிறம். அவர் மிகவும் பரிசுத்தமாயிருக்கவேணுமென்றதைக் காட்டுகின்றது.*

2. பச்சை (=பிதாவின் நன்மை; அவரில் நாங்கள் வைத்திருக்கவேண்டிய நம்பிக்கை)—*சாதாரண ஞாயிறு நாட்களிலும் அவைகளைப் பின்தொடரும் கிழமை நாட்களிலும் பாவிக்கப்படும்.*

*இது மேற்றிராணியாரின் நிறம். அவர் கவனத்துடன் ஆத்துமாக்களை மேய்க்கவேணுமென்றதைக் காட்டுகின்றது.*

3. ஊதா (=சுதனின் பாடுகள்; அவரைக் கண்டுபாவித்து நாங்கள் செய்யவேண்டிய தபசு)—*ஆகமன தபசு காலங்களிலும் விழிப்பு நாட்களிலும் பாவிக்கப்படும்.*

*இது மொன்சினியோரின் நிறம். அவர் தபசு பண்ணியே திருச்சபையின் பிரபுவாயிருக்கக்கடவார் என்றதைக் காட்டுகின்றது.*

4. சிவப்பு (=இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாத நெருப்பு; அவரின் வரப்பிரசாத உதவியால் வேதத்துக்காக இரத்தம் சிந்துதல்)—இஸ்பிரீத்துசாந்துவின், அப்போஸ்தலர்களின், வேதசாட்சிகளின் திருநாட்களில் பாவிக்கப்படும்.

இது கர்தினலின் நிறம். அவர் வேதத்துக்காக இரத்தம் சிந்த ஆயத்தமாயிருக்கவேணுமென்றதைக் காட்டுகின்றது.

5. கறுப்பு (=தேவதரிசனை இல்லாமல் உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அனுபவிக்கும் இருள்; அதைக் கண்டு எங்களுக்கு வரும் உலக வெறுப்பு)—மரித்தோர்களின் பூசையில் பாவிக்கப்படும்.

இது குருவானவரின் நிறம். அவர் உலகத்தை வெறுத்துத் தேவனைத் தேடவேணுமென்றதைக் காட்டுகின்றது.

## லத்தின் பாஷையின் உச்சரிப்பு

### 1-ம் பாடம்

Aa = அ, ஆ. Ee = எ, ஏ. Uu = உ, ஊ.

Mm = ம். Nn = ன், ந். Tt = (த்).

Amen = (ஆம்என்) ஆமென்.

Me = (ம்எ) மெ.

Meam = (ம்எஆம்) மேயாம்.

Te = (த்ஏ) தே.

Tanta = (த்ஆன்த்ஆ) தான்தா.

Tamen = (த்ஆம்என்) தாமென்.

Et = எத்.

Ut = உத்.

Tua = (த்ஊஅ) தூஅ.

Nam = (ந்ஆம்) நாம்.

Eum = (ஏஉம்) ஏயும்.

Unum = (ஊன்உம்) ஊனும்.

## 2-ம் பாடம்

Oo = ஒ, ஓ.  Cc = ச், க்.  Dd = ட்.  Hh = ஃ.

Ii = இ, ஈ.  Ss = [ச்] ஸ்.  Rr = ற் (ர்)  Jj = ஜ்(ய்)

Deus = (ட்எஉஸ்) டேயுஸ்.

Dominum = (ட்ஒம்இன்உம்) டோமினும்.

Maria = (ம்அற்ஈஅ) மறீஅ.

Incedo = (இன்ச்எட்ஒ) இன்சேடோ.

Est = எஸ்த்.

Adhuc = (அட்ஃஉக்) அடுக்.

Jesu = (ஜ்எஸ்உ) ஜேசு.

Christo = (க்ஃற்ஈஸ்த்ஒ) கிறீஸ்தோ.

Amo = (அம்ஒ) அமோ.

Omnes = (ஒம்ன்எஸ்) ஒம்னெஸ்.

Suus = (ஸ்ஊஉஸ்) ஸூஉஸ்.

Homo = (ஃஒம்ஒ) ஒமோ.

## 3-ம் பாடம்

Bb = (ப்) Ll = ல் (ள்) Gg = (க்) Qq = க்உ.
Ff = (வ்) Pp = ப் Kk = க் Vv = வ்
Xx = க்ஸ் Zz = (ஸ்)

Beata = (ப்எஆத்அ) பெயாத்த.
Filio = (வ்ஈல்இஒ) வீலியொ.
Laudate = (ல்அஉட்ஆத்எ) லௌடாத்தெ.
Zelo = (ஸ்எல்ஒ) ஸேலொ.
Rex = (ற்எக்ஸ்) றெக்ஸ்.
Ave = (ஆவ்எ) ஆவெ.
Vobis = (வ்ஒப்இஸ்) வோபிஸ்.
Cœlo = (ச்எல்ஒ) சேலொ.
Patri = (ப்ஆத்ற்இ) பாத்றி.
Spiritu = (ஸ்ப்இர்ஈத்உ) ஸ்பிரீத்து.
Regina = (ற்எஜ்ஈன்அ) றெஜீன.
Gloria = (க்ள்ஓற்இஅ) க்ளோறிய.
Kalendæ = (க்அல்என்ட்எ) கலென்டே.
Qui = (க்உஈ) குஈ.
Quare = (க்உஆற்எ) குஆறெ.
Lætus = (ல்எத்உஸ்) லேத்துஸ்.

## 4-ம் பாடம்

| | | |
|---|---|---|
| Aa = அ, ஆ | Ii = இ, ஈ | Qq = க்உ |
| Bb = (ப்) | Jj = ஜ் (ய்) | Rr = ற் (ர்) |
| Cc = ச், க் | Kk = க் | Ss = ஸ் (ச்) |
| Dd = ட் | Ll = ல் (ள்) | Tt = (த்) |
| Ee = எ, ஏ | Mm = ம் | Uu = உ, ஊ |
| Ff = (வ்) | Nn = ன், ங் | V = வ் |
| Gg = (க்) | Oo = ஒ, ஓ | X = க்ஸ் |
| Hu = ஃ | Pp = ப் | Z = (ஸ்) |

| | |
|---|---|
| Nobis = நோபிஸ் | Maxima = மக்ஸிம |
| Incedo = இன்சேடொ | Fecit = வேச்சித் |
| Populi = போப்புலி | Michæli = மிக்காஎலி |
| Lucem = லூசெம் | Sancto = ஸாங்தோ |
| Tristis = திறிஸ்திஸ் | Gentes = ஜென்தெஸ் |
| Vultus = வுல்துஸ் | Quoniam = கோனியாம் |
| Culpa = குல்பா | Repuli = றெப்புலி |
| Plebs = பிளெப்ஸ் | Nimis = நீமிஸ் |
| Cœlum = சேலும் | Dexter = டெக்ஸ்தர் |
| Lætificat = லெத்திவிக்காத் | |
| Confiteor = கொன்வீத்தெயொர் | |
| Inimicus = இனிமீக்குஸ் | Eliza = எலிஸா |
| Affligit = அ[illegible]ளிஜித் | Archi = ஆர்க்கி |

## 5-ம் பாடம்

பின்வரும் லத்தின் சொல்லுகளை வாசிக்கட்டும்:

Gloria Patri et Filio et Spiritui Sancto.

In nomine Jesu Christi.

Mea maxima culpa.

Laudate Deum omnes gentes.

Ave Maria gratia plena,

Per omnia sæcula sæculorum.

Zelo selatus sum pro Deo,

Qui es in cœlo.

Fiat voluntas tua.